(i) நான் அடுத்த வாரம் கண்டிக்குச் .....

(ii) அப்பா நாளை கொழும்பிலிருந்து .....

09. கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

(1) விளையாட்டு முற்றம் .....

(2) வைத்தியசாலை .....

10. பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தழிழ்ச் சொற்களை எழுதுக.

(1) பந்திகாமறய .....

(2) நெலும் மல .....

www.lkedu.lk

Scanned with CamScanner

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப்பதத்தை எழுதுக.

(1) national flag ..... (2) sparrow .....

12. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(1) நத்தை ..... (2) மரங்கொத்தி .....

13. பின்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடை எழுதுக.

(01) பின்வரும் எண்ணைச் சொற்களில் எழுதுக.

38309 :- .....

(02) கீழே தரப்பட்டுள்ள எண்களில் மிகப்பெரிய எண்ணைத் தெரிவு செய்து எழுதுக.

11548 , 21424 , 26324 , 28030 .....

(03)

7	3
9	6


இவ்விலக்கங்களைக்கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணை எழுதுக.

.....

(04) கீழே தரப்பட்டுள்ள எண்ணுக்கு முன்னால் உள்ள எண்ணையும் பின்னால் உள்ள எண்ணையும் உரோம எண் குறியீடுகளில் எழுதுக.

..... , XV , ...

(05) பின்வரும் உருவில் நிறந்தீட்டப்பட்டுள்ள பகுதியைப் பின்னத்தில் எழுதுக.



.....

(06) பேருந்தொன்று மு.ப.10.15 இற்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு பி.ப.1.00 இற்கு காலி நகரை வந்தடைந்தது. அப்பயணத்திற்குச் செலவாகிய நேரம் எவ்வளவு?

.....

(07) ஒரு நூலகத்தில் 2630 வரலாற்றுப் புத்தகங்களும் 1396 கதைப் புத்தகங்களும் 3275 இலக்கியப் புத்தகங்களும் உள்ளன. அங்குள்ள புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

www.lkedu.lk

Scanned with CamScanner

(08) 720 சவர்க்காரங்களை ஆறு பெட்டிகளில் சமனாக அடுக்கினால் ஒரு பெட்டியில் இருக்கும் சவர்க்காரங்களின் எண்ணிக்கை யாது?

.....

(09) அம்மா 2ℓ பழச்சாற்றுடன் 3ℓ நீர் கலந்து பழப்பானம் தயாரித்தார். அவர் தயாரித்த பழப் பானத்தின் அளவு யாது?

.....

(10) 55cm நீளமான கம்பித் துண்டுடன் 35cm நீளமான கம்பித்துண்டு ஒன்று சேர்த்து ஒட்டப்பட்டது. தற்போது கம்பியின் நீளம் யாது?

.....

(11) 1750g இல் எத்தனை 250g உண்டு?

.....

(12) வகுப்பு ஒன்றில் உள்ள மாணவர்கள் விரும்பும் செல்லப்பிராணிகள் பற்றி பெறப்பட்ட தகவல்களை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

செல்லப்பிராணி	தடவைகள்	எண்ணிக்கை
நாய்	///// ///// /////	15
பூனை	///// ///	8
கிளி	///// ///// //	12
மைனா	///// ////	9
அணில்	///// ///// ////	14

தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) கூடுதலான மாணவர்கள் விரும்பும் செல்லப்பிராணி எது?

.....

(ii) கிளி, மைனா ஆகிய இரண்டையும் விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

.....

(13) கண்ணன் தன்னிடமிருந்த பணத்தில் 1/4 பங்கை மனைவிக்குக் கொடுத்தான். மீதிப்பணத்தில் அரைவாசியை வங்கியில் வைப்பிலிட்ட பின்னர் அவனிடம் ரூ. 1500.00 மீதியாக இருந்தது எனின் அவன் மனைவிக்குக் கொடுத்த பணம் எவ்வளவு?

.....

www.kedu.lk

Scanned with CamScanner


(14) தேங்காய் வியாபாரி ஒருவர் ஒரு தேங்காய் ரூ. 25.00 வீதம் 250 தேங்காய்களை வாங்கினார் அவற்றை ஒன்று ரூ. 30.00 வீதம் விற்றார்.

(1) அவர் தேங்காய்களை வாங்குவதற்காக கொடுத்த மொத்தப் பணம் எவ்வளவு?

.....

(2) தேங்காய்களை விற்றதன் மூலம் பெற்ற பணம் எவ்வளவு? .....

(15) A , B , C , D , E எனப் பெயரிடப்பட்டுள்ள ஐந்து தளவடிவங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



(i) கூடிய எண்ணிக்கையான சமச்சீர்க் கோடுகள் வரையத்தக்க வடிவத்திற்குரிய ஆங்கில எழுத்து எது?

.....

(ii) குறைந்த எண்ணிக்கையான சமச்சீர்க் கோடுகள் வரையத்தக்க வடிவத்திற்குரிய ஆங்கில எழுத்து எது?

.....

14. பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. ஒரு மாணவன் நாட்டுக்காக ஆற்றும் கடமை பின்வருவனவற்றுள் எது?
(1) பொதுச் சொத்துக்களைப் பேணிப் பாதுகாத்தல்.
(2) நாட்டு வளங்களை சீரழித்தல்.
(3) நண்பர்களுடன் சேர்ந்து உல்லாசமாகத் திரிதல்.

02. ஆன்மீக நல்வாழ்வுக்காக தினமும் செய்யவேண்டிய செயற்பாடு எது?
(1) நீண்ட நேரம் உறங்குதல் (2) பசி ஏற்படாதவாறு அடிக்கடி உண்ணுதல்
(3) தியானம் செய்தல்

03. பயிர்களைச் சேதப்படுத்தும் நத்தைகளை அழிக்கும் பிராணி எது?
(1) செண்பகம் (2) குயில் (3) பாம்பு

04. பின்வருவனவற்றுள் மின்சாரக் கம்பிகளில் இரவைக்கழிக்கும் பிராணி எது?
(1) வெளவால் (2) காகம் (3) குயில்

05. பூக்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பிராணி எது?
(1) அணில் (2) வெளவால் (3) தேனீ

06. ஆறு கால்களைக் கொண்ட பிராணி கீழ்வருவனவற்றுள் எது?
(1) நுளம்பு (2) உண்ணி (3) சிலந்தி


07. எதிரியைக் கண்டவுடன் தனது உடலை கித்துள் வித்துப்போன்று சுருட்டிக்கொள்ளும் பிராணி
(1) நத்தை (2) பல்லி (3) ஆமடில்லா

08. அயடின் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
(1) முரசு கரைதல் (2) பெரிபெரி (3) தொண்டைக்கழலை

www.lkedu.lk
Scanned with CamScanner

09. 

பொலிசாரின் இச்சைகையானது குறித்து நிற்பது.
(1) முன்னால் வரும் வாகனங்களை நிறுத்துக.
(2) பின்னால் வரும் வாகனங்களை நிறுத்துக.
(3) முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் வரும் வாகனங்களை நிறுத்துக.

10. 

அருகில் தரப்பட்டுள்ள விளையாட்டு எது?

(1) தாயம் (2) சதுரங்கம் (3) கரம்

12. தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் பொதுவான பண்டிகை எது?
(1) வெசாக் (2) தீபாவளி (3) சித்திரை வருடப்பிறப்பு

13. பின்வரும் தாவரங்களுள் பூக்காத தாவரம் எது?
(1) மடுப்பனை (2) துளசி (3) ஆமணக்கு

14. பின்வருவனவற்றுள் கால வேறுபாடின்றிப் பூப்பூக்கும் தாவரம் எது?
(1) பிறைப்பூ (2) மா (3) கமுகு

15. கடதாசியில் துளையிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவி எது?



(1)



(2)



(3)


16. பின்வரும் தையல் முறைகளில் அடிப்படைத் தையல் எது?
(1) நரம்புத்தையல் (2) கம்பளித்தையல் (3) பெருநூலோடி

17. 

இக்குறியீட்டின்மூலம் காட்டப்படுவது.
(1) கழுவாமல் பயன்படுத்துக (2) ஈரலிப்பிலிருந்து பாதுகாப்பு
(3) நொருங்கக்கூடியது

18. வேடுவர்களின் கலாசார நடனம் எது?
(1) கரகம் (2) காவடி (3) கிரிகொரங்க

19. இலங்கையின் தென்மாகாணத்தில் அமைந்துள்ள மாவட்டங்கள்.
(1) காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை (2) கொழும்பு, கம்பகா, களுத்துறை
(3) கண்டி, நுவரெலியா, மாத்தளை

20. 

நீருள்ள பாத்திரம் ஒன்றினுள் பனிக்கட்டி ஒன்றை இட்டு அதனை அவதானிக்கும் போது நிகழமுடியாதது.
(1) நீர் நீராவியாக மாறும்.
(2) பனிக்கட்டி நீரில் மிதக்கும்.
(3) பாத்திரத்தின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகள் தோன்றும்.

www.lkedu.lk

Scanned with CamScanner

21. இலங்கை முழுவதையும் ஆங்கிலேயர் கைப்பற்றிய ஆண்டு எது?
(1) 1656 (2) 1795 (3) 1815

22. பின்வருவனவற்றுள் சூழல் நேயப் போக்குவரத்துச் சாதனம் எது?
(1) புகையிரதம் (2) பேருந்து (3) துவிச்சக்கரவண்டி

23. நாய் கடித்த ஒருவருக்கு உடனடியாகச் செய்யவேண்டிய முதலுதவி எது?
(1) கடித்த இடத்தினைத் துணியால் இறுக்கிக் கட்டுதல்
(2) தண்ணீர் குடிக்கக் கொடுத்தல்
(3) கடித்த இடத்தினைச் சவர்க்கார நீரினால் கழுவுதல்

24. பின்வரும் கருவிகளுள் காற்றின் மூலம் இசையெழுப்புவது எது?
(1) நாதஸ்வரம் (2) தபேலா (3) வீணை

25. பின்வருவனவற்றுள் கட்புல சாதனமாக அமைவது எது?
(1) பத்திரிகை (2) வானொலி (3) தொலைக்காட்சி

26. பின்வரும் விளையாட்டுக்களில் கிராமிய விளையாட்டாக அமையாதது.
(1) கிளித்தட்டு (2) கிட்டியடித்தல் (3) வொலிபோல்

27. மாப்பொருள் அதிகளவில் அடங்கியுள்ள உணவு வகை எது?
(1) மரவள்ளி (2) பருப்பு (3) பயறு

28. மஞ்சள் நிறப் பின்னணியுடன் காணப்படும் இவ்வீதிச் சமிக்கை குறிப்பது



(1) சிறுவர் பாதையைக் கடக்குமிடம்
(2) பாதசாரிகள் கடவை முன்னால்
(3) சிறுவர் கடவை முன்னால்

29. பச்சை நிறத்தைப் பெற்றுக் கொள்வதற்குச் சேர்க்க வேண்டிய நிறங்கள்.
(1) நீலம், சிவப்பு (2) சிவப்பு, மஞ்சள் (3) நீலம், மஞ்சள்

30. பிராணிகள் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் மாத்திரம் இடம்பெறும் விடை எது?
(1) எண்ணை, கடல்மாங்காய், புன்னை (2) துத்திரி, நாயுருவி, நெருஞ்சி
(3) ஆமணக்கு, ஆடையொட்டி, புன்னை

15. "ஒரு மாணவனின் கடமைகள்" என்னும் தலைப்பில் பொருத்தமான மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.)

1) .....

.....

2) .....

.....

3) .....

.....

www.Kedu.lk

Scanned with CamScanner

ஆற்றல்

அகரம் aharam

மாதிரிப் பரீட்சை - 2021

தொடர் - 6

தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	


தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**


www.ikeu.lk

Scanned with CamScanner

01ஆம் 02ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.


01.






(1) (2) (3)

02.





(1) (2) (3)


3ஆம் 4ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் ஒன்று ஏனையவற்றிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

03.



(1) (2) (3)

04.



(1) (2) (3)


www.lkedu.lk

Scanned with CamScanner

கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு எல்லாச் சொற்களுடனும் பொருந்துகின்ற விடையைத் தெரிவு செய்க.


05. பால்
வீடு
முலையூட்டி


(1)


(2)


(3)

06. பொழுதுபோக்கு
மின்சாரம்
அறிவு


(1)


(2)


(3)

பின்வரும் சொற்கூட்டங்களுள் ஒரு சொல் ஏனையவற்றிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. அச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

07. (1) ஆதவன் (2) அம்புலி (3) பகலவன் (4) சூரியன்

08. (1) ஆடு (2) மாடு (3) நாய் (4) கோழி

முதலில் தரப்பட்டுள்ள இருசொற்களுக்கும் இடையிலுள்ள தொடர்பை அவதானித்து அடுத்துவரும் சொல்லுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

09. குயில் - கூவும் எனின், மயில் - .....

(1) அகவும் (2) பாடும் (3) கூவும்

10. நெல் - நாற்று எனின், கமுகு - .....


(1) கன்று (2) குட்டி (3) தாவரம்

www.lkedu.lk


Scanned with CamScanner

பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

மாம்பழம், பப்பாசிப்பழம், அன்னாசி ஆகியவற்றின் நிறை தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது. இதனை அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்குக.







11. இங்கு நிறை கூடிய பழம் எது?

(1) மாம்பழம் (2) பப்பாசிப்பழம் (3) அன்னாசி

12. இங்கு நிறை குறைந்த பழம் எது?

(1) மாம்பழம் (2) பப்பாசிப்பழம் (3) அன்னாசி

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தின் கீழ்க் கோடிக.

13. (1) பிள்ளகள் வகுப்பறையில் இருந்து பாடம் படித்தார்கள்.

(2) பிள்ளைகள் வகுப்பறையில் இறுந்து பாடம் படித்தார்கள்.

(3) பிள்ளைகள் வகுப்பறையில் இருந்து பாடம் படித்தார்கள்.

14. (1) நான் புள்ளாங்குழலின் இசையைக் கேட்டேன்.

(2) நான் புல்லாங்குளலின் இசையைக் கேட்டேன்.

(3) நான் புல்லாங்குழலின் இசையைக் கேட்டேன்.

15. கீழே தரப்பட்டுள்ள A, B ஆகிய இரு உருக்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசங்களின் எண்ணிக்கை யாது?






(1) 2 (2) 3 (3) 4


www.lkedu.lk

Scanned with CamScanner


சதுர வடிவக்கடதாசியானது படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு நான்காக மடிக்கப்பட்ட பின்னர் துளையிடப்பட்டது. அதனை விரிக்கும் போது தோன்றும் சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

16.






(1)





(2)




(3)

17.





(1)




(2)





(3)

கீழே தரப்பட்டுள்ள கோலங்களை இனங்கண்டு ? இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.

18.










(1) 24 (2) 22 (3) 36

19.








(1) 7 (2) 5 (3) 9

20. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றினுள் 2 கறுப்பு நிறப் பேனைகளும் 2 நீல நிறப்பேனைகளும் உள்ளன. பெட்டியிலிருந்து ஒரு நீலநிறப் பேனையைத் தவறாமல் பெறுவதற்கு பெட்டியிலிருந்து எடுக்கவேண்டிய பேனைகளின் ஆகக் குறைந்த எண்ணிக்கை யாது?

(1) 2 பேனைகள் (2) 3 பேனைகள் (3) 4 பேனைகள்.

www.lkedu.lk
Scanned with CamScanner

தாவர உணவு . மாமிச உணவு ஆகிய இரண்டையும் உண்பவை தொடர்பான தொடர்பைப் பின்வரும் உருவானது காட்டுகின்றது. இதனைக்கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.



21. ஆங்கில எழுத்து X இனால் குறிப்பதற்குப் பொருத்தமான பிராணி எது?
(1) முயல் (2) சிங்கம் (3) நாய்

22. ஆங்கில எழுத்து Z இனால் குறிப்பதற்குப் பொருத்தமான பிராணி எது?
(1) காகம் (2) நரி (3) மான்

23. நடந்து சென்றுகொண்டிருந்த ஒருவரின் இடது கைப்பக்கம் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தது எனின் அவர் சென்ற திசைக்கு எதிர்த்திசை எது?

(1) தெற்கு (2) மேற்கு (3) வடக்கு

24. ஏழு பேர் தமக்கிடையே வாழ்த்து மடல்களைப் பரிமாறிக்கொண்டனர் எனில் அவர்கள் அனைவரும் பரிமாறிக்கொண்ட வாழ்த்து மடல்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 42 (2) 30 (3) 56

25. 4 ஆலும் 5 ஆலும் மீதியின்றி வகுபடக்கூடிய 25 இற்கும் 75 இற்கும் இடையிலுள்ள எண்கள் எத்தனை?

(1) 2 (2) 3 (3) 4


26. புத்தகம் ஒன்றின் 15 ஆம் பக்கத்தில் இருந்து 20 ஆம் பக்கம் வரையுள்ள தாள்கள் கிழிந்து விட்டன. ஆகவே கிழிந்த தாள்களின் எண்ணிக்கை யாது?


(1) 3 (2) 4 (3) 5

27. எட்டு விளிம்புகளையும் ஐந்து உச்சிகளையும் கொண்ட திண்ம வடிவம் எது?


(1) கனவுரு (2) சதுரடிக்கூம்பகம் (3) நான்முகி

28. கீழே தரப்பட்டுள்ள சதுரமுகியைப் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு புள்ளிக்கோடு வழியே வெட்டும்போது தோன்றும் புதிய முகத்தின் வடிவத்தை தெரிவுசெய்க.






(1)




(2)



(3)

www.lkedu.lk
Scanned with CamScanner

29. அருகே காட்டப்பட்டுள்ள உருவானது செங்கற்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் முறையைக் காட்டுகின்றது. இவ்வுருவில் காணப்படும் செங்கற்களின் மொத்த எண்ணிக்கை யாது?



(1) 24 (2) 16 (3) 12

30. கீழே தரப்பட்டுள்ள கணிதச் செய்கையில் கூடுகளுள் வரவேண்டிய குறியீடுகளை தெரிவு செய்க.

8 ☐ 4 ☐ 7 = 19

(1) (+ , x) (2) (+ , ÷) (3) (+ , +)

31. அண்ணாவினதும் தம்பியினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 25 வருடங்களாகும். அண்ணா தம்பியை விட 3 வருடங்கள் மூத்தவன் எனில் தம்பியின் வயது யாது?

(1) 15 (2) 14 (3) 11

கீழே தரப்பட்டுள்ள பிரசினங்களில் உள்ள ஒவ்வொரு ஆங்கில எழுத்திற்கும் 10 இற்கும் குறைந்த பெறுமானம் வழங்கப்பட்டுள்ளது. அதனை அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்குக.

T M X	S T Y	S T Y
+ T M X	- T X M	+ T X M
2 8 6	3 7 8	6 4 6

32. ஆங்கில எழுத்து **T** இன் பெறுமானம் யாது?

(1) 3 (2) 1 (3) 2

33. ஆங்கில எழுத்து **Y** இன் பெறுமானம் யாது?

(1) 2 (2) 4 (3) 3

34. நிமலன் தனது கையில் இருக்கும் புகைப்படத்தைப் பார்த்து பின்வருமாறு கூறினான்.
''இப்படத்தில் இருப்பவர் எனது தந்தையின் மகனின் அண்ணா ஆவார்.'' எனின் நிமலனின் கையில் உள்ள புகைப்படத்தில் உள்ளவர் யார்?

(1) நிமலனின் தந்தை (2) நிமலனின் தங்கை (3) நிமலன்

www.kegu.lk
Scanned with CamScanner


35. 2020 ஆம் ஆண்டு லீப்வருடமாகும். இவ்வருடத்தின் மாசி மாதம் 1 ஆம் திகதி சனிக்கிழமை ஆகும். இம்மாதத்தில் உள்ள சனிக்கிழமைகள் எத்தனை?

(1) 3 (2) 4 (3) 5

36. 100 தொடக்கம் 110 வரையுள்ள எண்களை எழுதும்போது இலக்கம் 1 பயன்படுத்தப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 11 (2) 12 (3) 13

கீழே சதுரமுகி ஒன்றின் மூன்று நிலைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.



37. ஆங்கில எழுத்து **A** இற்கு எதிரே இருக்கும் முகத்தில் உள்ள எழுத்து எது?

(1) B (2) E (3) F

38. ஆங்கில எழுத்து **E** இற்கு எதிரே இருக்கும் முகத்தில் உள்ள எழுத்து எது?

(1) F (2) B (3) C

39. நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அந்த எண்ணின்,

- நான்காம் இலக்கம் முதலாம் இலக்கத்தின் மூன்று மடங்காகும்.
- மூன்றாம் இலக்கம் இரண்டாம் இலக்கத்தின் மூன்று மடங்காகும்.

அவ்வெண் கீழே தரப்பட்டுள்ள எண்களில் யாதாக இருக்கலாம்?

(1) 3269 (2) 9623 (3) 6932

40. எமது விளையாட்டுக் குழுவில் உள்ள அனைவரும் உயரமானவர்கள். விமல் உயரமானவன். ஆகவே விமல் எமது விளையாட்டுக்குழுவைச் சேர்ந்தவன் என்னும் கூற்று.

(1) சரியானது (2) பிழையானது (3) சரியாகக் கூறமுடியாது

www.lkedu.lk

Scanned with CamScanner

ஆற்றல்

அகரம் Aharam

மாதிரிப் பரீட்சை - 2021

தொடர் - 6

தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் உள்ள **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத் தாளிலேயே** தருக.
- சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கூறப்பட்ட ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- சரியான விடை எழுதப்படவேண்டிய ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**

www.kalvi.lk

Scanned with CamScanner

01. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

காலைக் கதிரவன் தன் கடமை உணர்வோடு கிழக்கு வானிலே செம்மஞ்சள் நிறப்பந்து போல மெதுவாக மேலெழுகிறான். கதிரவனைக்கண்ட நிலவுமகள் தன் கடமையை முடித்து நாணத்துடன் ஒளிந்து கொள்கிறாள். கடிகாரப் பறவைகளான சேவல்களும் கரைந்து சத்தமிடும் காகங்களும் விடியலை அறிவித்து, கதிரவனை வரவேற்கின்றன. ஆலயங்களின் கண்டாமணி ஓசை காதில் கணீரென ஒலிக்கக் கூட்டங்கூட்டமாகப் பறந்து திரியும் பட்சிகளின் இனிய கானம் சூழலை இனிமையாக்குகின்றது.

(1) விடியலை அறிவிப்பவை எவை? .....

(2) சூழலை இனிமையாக்குவது எது? .....

(3) பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களைப் பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) சூரியன் ..... (ii) பறவைகளின் .....

(4) அடுக்குமொழி ஒன்று எழுதுக. .....

(5) நிகழ்காலப் பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக. .....

(6) அ.்றிணைப் படர்க்கை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக. .....

02. பின்வரும் சொற்களில் எதிர்ப்பாற் சொற்கள் அல்லாத சொல்லின் கீழ்க் கோடிடுக.

(1) அரசன் , மந்திரி , அரசி , தம்பி , தங்கை

(2) தேவன் , தம்பி , தங்கை , நடிகன் , நடிகை

03. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

(1) இலங்கையின் பழைமையான நகரங்களுள் அநுராதபுரமும் ஒன்றாகும்

(2) நம் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் யாவர்

04. பின்வரும் பந்தியில் காணப்படும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.

பாரதியார்	தன்மை	காப்பியங்கள்	சீவகசிந்தாமணி

தமிழில் சிலப்பதிகாரம், மணிமேகலை, 1. ..... போன்ற இனிய 2. ..... உள்ளன. இவை மிகவும் பழைமையானவை. படிக்கும்போது உள்ளத்தை உருக்கும் 3. ..... உடையவை. தற்காலத்திலேயே 4. ..... கவிமணி போன்ற கவிஞர்கள் இனிய எளிய நடையில் பல நூல்களை இயற்றியுள்ளனர்.

www.lkedu.lk

Scanned with CamScanner

சுட்டெண் :.....

05. பின்வரும் பந்தியில் உருவினால் காட்டப்பட்டுள்ள இடத்திற்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்து கோடிடுக.

ஓர் அடர்ந்த காட்டில்  வாழ்ந்து வந்தது. அதனுடன்  நண்பனாக இருந்தது. ஒரு நாள் அவை காட்டு வழியே நடந்து செல்லும்போது சில  கண்டன.

(1) (i) ஆந்தைக்கு (ii) ஓர் ஆந்தை (iii) ஆந்தையை

(2) (i) ஒரு நரி (ii) நரியின் (iii) நரிகளோடு

(3) (i) எறும்புகளோடு (ii) எறும்புகளால் (iii) எறும்புகளைக்

06. பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக எதுழுக.

(1) பூனை பாலைக் குடித்தது.
பூனையின் தாகமும் களைப்பும் நீங்கியது.

.....

07. பின்வரும் சொற்களைப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் அமையுங்கள்.

(1) வேண்டாம் / போக்கெல்லாம் / மனம் / போன / போக

.....

(2) பாதுகாத்தல் / எமது / நோய் / உடலை / வராமல் / நாம் / வேண்டும்.

.....

08. பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.

(1) சிறு துளி பெரு வெள்ளம்.

.....

(2) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

.....

09. பின்வரும் வினாக்களுக்கு இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

(1) பிள்ளைகள் ஒன்று சேர்ந்து ..... (விளையாடினார்கள் , விளையாடினார்)

(2) அரசன் தஞ்சம் புகுந்த புறாவைக் ..... (காப்பாற்றினார்கள், காப்பாற்றினான்)

www.lkedu.lk

Scanned with CamScanner

10. கீழ்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(1) துவன்ன ..... (2) அத்த சோதன்ன .....

11. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை எழுதுக.

(1) வாழைக்காய் ..... (2) திராட்சை .....

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப்பதத்தை எழுதுக.

(1) Blakcboard ..... (2) Horse .....

13. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(1) வெண்கட்டி ..... (2) கத்தரிக்காய் .....

14. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(01) எழுத்துக்களில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கங்களில் எழுதுக.

நாற்பதாயிரத்து நானூற்று மூன்று :- .....

(02)

9		5
	8	1

இவ்விலக்கங்களைக்கொண்டு ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை எழுதுக.

.....

(03) கீழே தரப்பட்டுள்ள உரோமன் எண்களுக்குரிய இந்து அராபிய எண்களை எழுதுக.

(i) ix..... (ii) xiv .....

(04) பின்வரும் பின்னங்களுக்குரிய சமவலுப் பின்னங்களை எழுதுக.

(i) $\frac{1}{2}$ = ... (ii) $\frac{1}{3}$ = ...

(05) பழத்தோட்டம் ஒன்றில் இருந்து 2954 மாம்பழங்களும் 3270 ரம்புட்டான் பழங்களும் 1439 கொய்யாப் பழங்களும் பறிக்கப்பட்டன. பறிக்கப்பட்ட மொத்தப் பழங்கள் எத்தனை?

.....

(06) ரூ.770 பணத்தினை வைத்திருக்கும் ஒருவர் ஒரு மாம்பழம் ரூ.7 வீதம் எத்தனை மாம்பழங்களை வாங்கமுடியும்?

.....

(07) நீர்த்தாங்கி ஒன்றில் 250ℓ நீர் உள்ளது. அதனுள் மேலும் 175ℓ 850mℓ நீர் ஊற்றப்பட்டது. தற்போது தாங்கியில் உள்ள நீரின் அளவு யாது?

.....

www.lkedu.lk

Scanned with CamScanner


(08) கயிறு ஒன்று இரு துண்டுகளாக வெட்டப்பட்டது. அதில் ஒரு துண்டின் நீளம் 2m 35cm ஆகும். மற்றைய துண்டின் நீளம் 3m 65cm எனின் ஆரம்பத்திலிருந்த கயிற்றின் நீளம் யாது?

.....

(09) 450 புத்தகங்களை ஒரு பொதியில் 4 புத்தகங்கள் வீதம் இருக்குமாறு எத்தனை பொதிகள் தயாரிக்க முடியும்?

.....

(10) வியாபாரி ஒருவர் ஐந்து நாட்களில் விற்ற பாலின் அளவு வரைபில் காட்டப்பட்டுள்ளது. இதனை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.



(i) திங்கள் கிழமை விற்ற பாலின் அளவு 30 லீற்றர் ஆகும். அதனை வரைபில் காட்டுக.

(ii) குறைவான பால் விற்கப்பட்ட நாள் எது?

.....

(11) ஒரு மாம்பழத்தின் விலை ரூ. 25.00 ஆகும். ஓர் அப்பிள் பழத்தின் விலை ரூ. 40 ஆகும். மாம்பழம், அப்பிள் பழம் ஆகியவற்றில் ஒரு குறித்த தொகையை வாங்குவதற்குச் செலவிட்ட பணம் ரூ.205.00 ஆகும். எனவே வாங்கியிருக்கக்கூடிய மாம்பழங்களின் ஆகக் கூடிய தொகை யாது?

.....

(12)

30		20
	36	
24		18


கூட்டுக்குள் தரப்பட்டுள்ள எண்களில் நான்கின் மடங்குகளைத் தெரிவு செய்து எழுதுக.

.....

(13) விழா ஒன்று பி.ப 2.35 இற்கு ஆரம்பித்து பி.ப 4.45 இற்கு நிறைவடைந்தது. விழா நடைபெற்ற நேரம் எவ்வளவு?



..... மணித்தியாலம் ..... நிமிடம்

www.ikeu.lk
Scanned with CamScanner

(14)  இவ்வுருவில் அவதானிக்கக்கூடிய செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

.....

(15) தரப்பட்டுள்ள வடிவங்களுக்கு ஒவ்வொரு சமச்சீர் கோடுகள் வரைக.

15. பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. ஒருவர் விரும்பக்கூடிய செயற்பாடு எது?
(1) பட்டப் பெயர் சொல்லி அழைத்தல்.
(2) பொய் பேசுதல்
(3) ஆரோக்கியமாக வாழ்தல்

02. மூங்கிலை விரும்பியுண்ணும் பிராணி எது?
(1) பன்டா (2) யானை (3) மான்

03. அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களுக்கிடையே வாழும் பிராணி எது?
(1) சிலந்தி (2) இராமபாணம் (3) கரப்பான்

04. குந்துகாலி என அழைக்கப்படும் பறவை எது?
(1) காகம் (2) புளுணி (3) மைனா

05. அழுக்குகளை உண்டு சூழலை சுத்தம் செய்யும் பிராணி எது?
(1) கறையான் (2) வெளவால் (3) காகம்

06. பின்வரும் பிராணிகளுள் நீண்ட நாட்கள் உயிர் வாழக்கூடிய பிராணி எது?
(1) எருமை (2) யானை (3) ஆமை

07 இரும்புச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
(1) காய்ச்சல் (2) குருதிச் சோகை (3) கண்டமாலை

08. 
பொலிசாரின் இச்சைகையானது குறித்து நிற்பது.
(1) முன்னால் வரும் வாகனங்களை நிறுத்துக.
(2) பின்னால் வரும் வாகனங்களை நிறுத்துக.
(3) முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் வரும் வாகனங்களை நிறுத்துக.

09. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
(1) வலைப்பந்து (2) கபடி (3) கரப்பந்து

10. திஸ்ஸ வாவியினைக் கட்டுவித்த மன்னன்.
(1) தேவநம்பியதீசன் (2) மகாசேனன் (3) பராக்கிரமபாகு

www.lkedu.lk

Scanned with CamScanner


11. தேசிய இலச்சினையிலுள்ள வாளேந்திய சிங்கம் குறித்து நிற்பது.
(1) நாடும் கட்டுப்பாடான மக்களும். (2) உலக நிலைப்பாடு
(3) சௌபாக்கியம்

12. 
படத்தில் காட்டப்பட்டுள்ள பிராணி எது?
(1) பிளாற்றிப்பசு (2) எறும்புண்ணி
(3) கபறக்கொய்யா

13. மாத்தளை மாவட்டம் அமைந்துள்ள மாகாணம் எது?
(1) மத்திய மாகாணம் (2) வடமேல் மாகாணம் (3) ஊவா மாகாணம்

14. தேசப்படங்களில் பெருந்தெருக்களைக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம் எது?
(1) சிவப்பு (2) பச்சை (3) மஞ்சள்

15. தரமான தேயிலையை நீரில் இட்டால் தோன்றும் நிறம்.
(1) கபிலம் (2) கருங்கபிலம் (3) இளமஞ்சள்

16. 

சாதாரண நீர் குளிர் நீர் சுடு நீர்

படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரே அளவான மூன்று குவளைகளில் ஒன்றில் சாதாரண நீரையும், ஒன்றில் சுடு நீரையும் மற்றயதில் குளிர் நீரையும் இட்டு அவற்றில் ஒரேயளவான பனிக்கட்டிகளை இடும்போது அவை கரைந்த ஒழுங்குமுறையைச் சரியாகக் காட்டுவது.

(1) A - B - C (2) A - C - B (3) C - A - B

17. 
இக்குறியீட்டின் மூலம் காட்டப்படுவது யாது?
(1) கவனமாகக் கையாளுங்கள் (2) இப்பக்கம் மேலே
(3) நொருங்கக்கூடியது

18. பின்வருவனவற்றுள் பானம் தயாரிக்கப் பயன்படும் வித்து எது?
(1) தேசி (2) கோப்பி (3) தேயிலை

19. பாதசாரிகள் வீதியால் செல்லும்போது எப்போதும்
(1) வலது பக்கமாகச் செல்லுதல் வேண்டும் (2) இடது பக்கமாகச் செல்லுதல் வேண்டும்
(3) கூட்டமாகச் செல்லுதல் வேண்டும்

20. காந்தம் ஒன்றினால் கவரப்படும் பொருள்
(1) இறப்பர் (2) அலுமினியம் (3) இரும்பாணி

21. வானத்தில் இயற்கையாகக் காணப்படும் பொருள் எது?
(1) சந்திரன் (2) விமானம் (3) செய்மதி

www.lkedu.lk
Scanned with CamScanner

22. வீடுகளில் பயன்படுத்தப்படும் பொருட்களில் ஒவ்வொருவரும் தனித்தனியாக பயன்படுத்தும் பாவனைப் பொருள் அல்லாதது

(1) கைக்குட்டை (2) கண்ணாடி (3) பற்தூரிகை

23. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடம் எது?

(1) கொழும்பு (2) மட்டக்களப்பு (3) திருகோணமலை

24. யாழ்ப்பாணத்தையும் கண்டியையும் இணைக்கும் பிரதான வீதியின் பெயர் யாது?

(1) A9 (2) A32 (3) A1

25. பின்வருவனவற்றுள் வித்துக்களை நீக்கிய பின்னர் சமைக்கப்படுவது எது?

(1) பயற்றை (2) வெண்டி (3) பாகல்

26. பின்வருவனவற்றுள் அச்சு ஊடகம் எது?

(1) தொலைக்காட்சி (2) வானொலி (3) பத்திரிகை

27. செங்கடகல என அழைக்கப்படும் நகரம் எது?

(1) திருகோணமலை (2) கண்டி (3) கொழும்பு

28. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள மிகச்சிறிய கோள் எது?

(1) புதன் (2) வியாழன் (3) புவி

29. காசுக்கட்டளையைப் பணமாக மாற்றிக்கொள்வதற்காகச் செல்லவேண்டிய இடம் எது?

(1) வங்கி (2) தபாலகம் (3) பிரதேச செயலகம்

30. 

இப்படத்தில் காணப்படுபவர்

(1) இலங்கையின் முதலாவது பிதமர்

(2) இலங்கையின் முதலாவது சனாதிபதி

(3) இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி

16. 'வாசிப்பதால் நாம் அடையும் பயன்கள்' என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

www.ikedu.lk

Scanned with CamScanner

ஆற்றல்

அகரம் Aharam

மாதிரிப் பரீட்சை - 2021

தொடர் - 7

தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	


தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**

www.ikeon.lk

Scanned with CamScanner


01ஆம் 02ஆம் வினாக்களில் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

01.



(1) (2) (3)


02.



(1) (2) (3)

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள படங்களை ஏதாவது ஒரு தொடர்பின் அடிப்படையில் மூன்று கூட்டங்களாக வகைப்படுத்த முடியும். அவ்வாறு வகைப் படுத்தப்பட்டுள்ள விடையின் கீழே கோடிடுக.


03.



A B C D E F

(1) AB | CE | DF (2) AD | BF | CE (3) AC | BE | DF

04.



A B C D E F

(1) AB | CD | EF (2) AB | CF | DE (3) AD | BE | CF

பின்வரும் வினாக்களில் பொருத்தமற்ற சொல் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.


05. (1) கரடி , கோழி , பன்றி (2) மான் , முயல் , மாடு
(3) சிங்கம் , கழுகு , சிறுத்தை

06. (1) கதிரை , மேசை , கட்டில் (2) கிணறு , குளம் , அலவாங்கு
(3) தொலைக்காட்சி , வானொலி , தொலைபேசி

www.lksclub.lk

Scanned with CamScanner

பின்வரும் உருவை அடிப்படையாகக்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.




07. இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 2 (3) 1


08. இவ்வுருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 6

09.



இவ்வுருவை அம்புக்குறி காட்டும் திசையில் இருந்து பார்க்கும் போது தோன்றும் முறையைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

10. தரப்பட்டுள்ள வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

கமக்காரன் கலப்பையுடன் வயலுக்குச் சென்றான்.

பிள்ளை புத்தகங்களுடன் பாடசாலைக்குச் சென்றது.

கமக்காரன் - பிள்ளை எனின்,
கலப்பையுடன் - .....

(1) புத்தகங்களுடன் (2) பாடசாலைக்கு (3) சென்றது

www.lkedu.lk

Scanned with CamScanner


11.

8	3	4
1	A	9
6	7	B

இவ்வுருவில் எண்கள் குறித்த ஒரு கோலத்தில் எழுதப்பட்டுள்ளன. அதன்படி A, B ஆகிய இடங்களில் வரவேண்டிய எண்களைத் தெரிவு செய்க.

(1) 2 , 5 (2) 5 , 2 (3) 2 , 6

12.



தராசு ஒன்றில் பொதி ஒன்று வைத்து நிறுக்கப்பட்டுள்ள முறையை உரு காட்டுகின்றது. அதன்படி சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) பொதியின் நிறை 4kg ஆகும்.
(2) பொதியின் நிறை 4kg இலும் கூடிதாகும்.
(3) பொதியின் நிறை 4kg இலும் குறைந்தது ஆகும்.

13. சலீம் ஓர் உண்டியலில் முதல் நாளில் ரூபாய் 5 ஐயும் அதற்கு அடுத்த நாளில் முதல்நாள் போட்டதின் இருமடங்கையும் சேமிப்பான். 10 ஆம் நாள் அவன் போட்ட பணம் எவ்வளவு?

(1) ரூ 100 (2) ரூ 2560 (3) ரூ 1280

14. ஐந்தாம் நாள் முடிவில் உண்டியலில் இருக்கும் பணம் எவ்வளவு?

(1) ரூ 155 (2) ரூ 310 (3) ரூ 150

15. ஒரு நோயாளிக்கு ஒருவேளைக்கு இரண்டு தேக்கரண்டிகள் வீதம் நாளொன்றுக்கு மூன்று தடவைகள் எடுப்பதற்கு மருந்துப்பானம் வழங்கப்பட்டது. அவர் ஐந்து நாட்களுக்கு எடுப்பதற்குத் தேவையான மருந்துப்பானம் எத்தனை மில்லிலீற்றர்?

(1) 300 மில்லிலீற்றர் (2) 150 மில்லிலீற்றர் (3) 100 மில்லிலீற்றர்

16. பிரசாந்திடம் பேனாவும் கொப்பியும் பந்தும் இருந்தன. தர்சனிடம் பென்சிலும் கொப்பியும் புத்தகமும் இருந்தன. கண்ணனிடம் பேனாவும் புத்தகமும் கொப்பியும் இருந்தன. மூவரிடமும் இருந்த பொதுவான பொருள் எது?

(1) பேனா (2) பென்சில் (3) கொப்பி

17. அண்ணனை விடத் தம்பி எப்போதும்.
(1) உயரத்தில் குறைந்தவர்
(2) அறிவில் குறைந்தவர்
(3) வயதில் குறைந்தவர்

18. ஒருவர் நீண்ட நாள் ஆரோக்கியமாக இருப்பதற்குச் செய்ய வேண்டியது.
(1) விலைகூடிய உணவுகளை மட்டும் உண்ண வேண்டும்
(2) பசி ஏற்படாதவாறு அடிக்கடி உண்ண வேண்டும்.
(3) போசாக்குள்ள உணவுகளை அளவோடு உண்ண வேண்டும்

www.lkedu.lk

Scanned with CamScanner

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தின் கீழ்க் கோடிக.

19. (1) காகம் அங்குமிங்கும் இறைதேடி அலைந்தது.

(2) காகம் அங்குமிங்கும் இரைதேடி அலைந்தது.


(3) காகம் அங்குமிங்கும் இரைதேடி அளைந்தது.

20. (1) நச்சத்திரம் வானில் மின்னியது.


(2) நட்சத்திறம் வானில் மின்னியது.

(3) நட்சத்திரம் வானில் மின்னியது.

கீழே தரப்பட்டுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள இரு அட்டைக் கீலங்களையும் ஒன்றின் மீது ஒன்று வைக்கும்போது தோன்றும் விடையைத் தெரிவு செய்க.

21. 

(1)  (2)  (3) 

22. 

(1)  (2)  (3) 

23. 1 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும்போது இலக்கம் 2 எத்தனை தடவைகள் எழுதப்பட வேண்டும்?

(1) 10 தடவை (2) 19 தடவை (3) 20 தடவை

24. நீளம், அகலம், உயரம் ஆகியவை 5cm வீதம் உள்ள மரச் சதுரமுகியில் இருந்து நீளம், அகலம், உயரம் ஆகியவை 1cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?

(1) 125 (2) 25 (3) 15

www.lkedu.lk

Scanned with CamScanner

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள எண்கள், எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றமின்றித் தெரியும் விடையின் கீழ்க் கோடிடுக.


25.

(1) 582 (2) 808 (3) 999

26.


(1) MON (2) AOR (3) HOH

27. பின்வரும் உருவில் அவதானிக்கக்கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?



(1) ஆறு (2) ஏழு (3) எட்டு


28. பின்வரும் உருவில் அவதானிக்கக்கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?





(1) 5 (2) 6 (3) 11

கீழே தரப்பட்டுள்ள கோலங்களை இனங்கண்டு ? இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.

29.








(1) 7 (2) 5 (3) 3

www.lkedu.lk

Scanned with CamScanner



30.





(1) 4 (2) 3 (3) 5

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களைக் குறிக்கப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31. மரம் , தென்னை , கத்தரி

(1)  (2)  (3) 

32. பறவை , காகம் , கொக்கு

(1)  (2)  (3) 

ஒரு சிறுவன் குறித்த ஓர் இடத்தில் இருந்து புறப்பட்டு மேற்கு நோக்கி 200m தூரம் சென்று வலது பக்கமாகத் திரும்பி 200m தூரம் சென்று மீண்டும் வலது பக்கமாகத் திரும்பி 200m தூரம் சென்றான்.

33. அவன் ஆரம்ப இடத்தில் இருந்து எத்திசையில் நிற்கின்றான்?

(1) வடக்கு (2) தெற்கு (3) மேற்கு

34. ஆரம்ப இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் நிற்கின்றான்?

(1) 200m (2) 400m (3) 600m

35. நண்பர்கள் சிலர் தமக்கிடையே வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டனர். அவர்களால் பரிமாறப்பட்ட வாழ்த்து மடல்களின் மொத்த எண்ணிக்கை 30 எனின் வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டவர்கள் எத்தனைபேர்?

(1) ஐந்துபேர் (2) ஆறுபேர் (3) பதினைந்துபேர்

36. பண்ணை ஒன்றில் உள்ள ஆடுகளினதும் கோழிகளினதும் எண்ணிக்கை 44 ஆகும். அவற்றின் கால்களின் மொத்த எண்ணிக்கை 120 எனின் பண்ணையிலுள்ள ஆடுகளின் எண்ணிக்கை யாது?

(1) 16 (2) 11 (3) 28

www.kedu.lk
Scanned with CamScanner


37. ஒரு சதுரவடிவக் காணியைச் சுற்றி கம்பிவேலி அமைப்பதற்காக கம்பித்தூண்கள் நடப்பட்டன. ஒரு பக்கத்திலுள்ள தூண்களின் எண்ணிக்கை 10 எனின் காணியைச்சுற்றி நடப்பட்ட தூண்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 40 (2) 36 (3) 44

38. புத்தகம் ஒன்றின் முதல் பக்கத்தினதும் இறுதிப் பக்கத்தினதும் எண்களின் கூட்டுத்தொகை 181 ஆகும். அப்புத்தகத்தில் உள்ள தாள்களின் எண்ணிக்கை யாது?

(1) 180 (2) 90 (3) 91

கீழே தரப்பட்டுள்ள சதுரமுகியானது அதன் ஆறு முகங்களும் நிறந்தீட்டப்பட்டதன் பின்னர் உருவில் காட்டியவாறு சிறிய சதுரமுகிகளாக வெட்டப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



39. வெட்டப்பட்ட சிறிய சதுரமுகிகள் எத்தனை?

(1) 16 (2) 27 (3) 64

40. இரண்டு பக்கங்கள் மட்டும் நிறந்தீட்டப்பட்ட சதுரமுகிகள் எத்தனை?

(1) 12 (2) 24 (3) 32

www.1kedu.lk

Scanned with CamScanner

ஆற்றல்

அகரம் Aharam

மாதிரிப் பரீட்சை - 2021

தொடர் - 7

தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் உள்ள **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத் தாளிலேயே** தருக.
- சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கூறப்பட்ட ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- சரியான விடை எழுதப்படவேண்டிய ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**

www.kalvi.lk

Scanned with CamScanner

01. பின்வரும் பாடலை வாசித்து அதன்கீழ்க் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மீனினம் ஓடிப் பரக்குதம்மா - ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா
வானுங் கடலாக மாறுதம்மா - இந்த
மாட்சியிலுள்ளம் முழுகுதம்மா.

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா - பின்னர்ச்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா.

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா - அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்பருலகின் இயல்பி தம்மா - மதிக்
கின்னார் இனியாரும் உண்டோ அம்மா.

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா - உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா - கண்ணிற்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா.

பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

(1) தாமரை எப்போது வாட்டமடையும்? .....

(2) பாடலில் மீனினம் எனக் கூறப்படுவது எது? .....

(3) ஆகாயத்தைக் கடலாகக் கூறி, சந்திரனை எதுவாகக் குறிப்பிருகிறார்?

.....

(4) இப்பாடலைப் பாடிய புலவர் யார்? .....

(5) பாடலில் வந்துள்ள **உவமை** எது? .....

(6) **அடுக்குமொழி** ஒன்று எழுதுக. .....

02. வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்பிற்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(01) பூந்தோட்டத்தில் மல்லிகைப் பூக்கள் .....
(மலர்ந்தது , மலர்ந்தன)

(02) நான் எனது தங்கையுடன் பாடசாலைக்குச் .....
(சென்றேன் , சென்றோம்)

(03) கழிவுநீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் .....
(பெருகுகின்றது , பெருகுகின்றன)

(04) சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் .....
(போன்றது , போன்றன)

03. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் மிகச்சரியான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) அ.்றிணைப் பன்மைப் பெயர்ச்சொல் எது?
(பறந்தன , புத்தகம் , மாணவர்கள் , விலங்குகள்)

(2) முன்னிலை ஒருமை வினைச் சொல் எது?
(நீ , வருகிறீர்கள் , படிக்கின்றாய் , எழுதினான்)

www.1kedu.lk
Scanned with CamScanner

(3) ஆண்பால் ஒருமைப் பெயர்ச்சொல் எது?
(அதிபர் , கூறினான் , சிறுவன் , புத்திசாலி)

04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

(1) புத்தக விழாவில் நாங்கள் பல அரிய நூல்களைப் பார்த்தோம்

(2) முத்தமிழ் என்பது இயல் இசை நாடகம் என்பனவாகும்

05. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

(1) ''வைத்தியர்" உயர்திணை ஒருமைப் பெயர்ச் சொல்லாகும். (.....)

(2) ''வாகனங்கள்" அ.்றிணை ஒருமைப் பெயர்ச் சொல்லாகும். (.....)

(3) ''ஆசிரியர்கள்" உயர்திணைப் பன்மைப் பெயர்ச் சொல்லாகும். (.....)

06. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

(1) அணில் மரத்தில் ஏறின.

.....

(2) அண்ணா அழகான ஓவியம் வரைந்தார்.

.....

07. பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.

(1) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

.....

(2) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

.....

08. பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியங்களாக எதுழுக.

விளையாட்டு வீரன் மைதானத்திற்குச் சென்றான்.
வீரன் மைதானத்தில் விளையாடினான்.

.....

09. பின்வரும் ஆண்பால் வாக்கியத்தைப் பெண்பால் வாக்கியமாக எழுதுக.

நான் எனது **நண்பனின்** வீட்டிற்குச் சென்றேன்.

.....

www.lkedu.lk

Scanned with CamScanner

10. கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

(1) தபால் நிலையம் ..... (2) கழுவுங்கள் .....

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப்பதத்தை எழுதுக.

(1) Cupboard .....

(2) Cockroach .....

12. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(1) வைத்தியசாலை ..... (2) சூரியகாந்தி .....

13. பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடை எழுதுக.

01. பின்வரும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

பதினாறாயிரத்து ஐம்பது .....

02.

9	7
2	4


கூட்டுக்குள் தரப்பட்டுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணை எழுதுக.

.....

03. பின்வரும் உரோமன் எண்களுக்குரிய இந்து அராபிய எண்களை எழுதுக.

1) vi ..... 2) ix .....

04. கீழே தரப்பட்டுள்ள உருவைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடையளிக்குக.



(i) நிழற்றப்பட்ட பகுதி எத்தனை கட்டங்களுக்குச் சமனானது?

.....

(ii) நிழற்றப்படாத பகுதியைப் பின்னத்தில் எழுதுக.

.....

05. ஒரு குவியலில் உள்ள 420 தேங்காய்களில் $\frac{3}{4}$ பங்கு விற்கப்பட்டால் எஞ்சியிருக்கும் தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.....

06. தரப்பட்டுள்ள எண்கோலங்களின் அடுத்து வரும் எண்ணை எழுதுக.


(i) 4 , 8 , 16 , 32 , ...

(ii) 1 , 4 , 9 , 16 , ...

www.lkedu.lk

Scanned with CamScanner

07. கீழே தரப்பட்டுள்ள சதுரத்திற்கு இரு சமச்சீர்க் கோடுகள் வரைக.



08. 2 லீற்றர் 750 மில்லிலீற்றர் எண்ணெய் சம அளவான 5 போத்தல்களில் ஊற்றப்பட்டது. ஒரு போத்தலில் உள்ள எண்ணெயின் அளவு யாது?

.....

09. ஒரு கொப்பியின் விலை ரூ. 65.00 வீதம் இரண்டு கொப்பிகளும் ஒரு பேனை ரூ. 15.00 வீதம் மூன்று பேனைகளும் வாங்கிய அமுதா கடைக்காரரிடம் ரூபாய் 500.00 பணத்தாள் ஒன்றினை கொடுத்தாள்.

(i) அவள் வாங்கிய பொருட்களுக்காகக் கொடுக்கவேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

.....

(ii) கடைக்காரர் அவளுக்குக் கொடுக்கவேண்டிய மீதிப் பணம் எவ்வளவு? .....

10. பன்னிரண்டு விளிம்புகளைக் கொண்ட திண்ம வடிவங்கள் இரண்டை எழுதுக.?

....

11. ஒரு பையில் 3kg 250g அரிசி உள்ளது. அதனுள் மேலும் 2kg 375g அரிசி இடப்பட்டது. தற்போது பையின் நிறை யாது?

.....

12. தொழிற்சாலை ஒன்றில் ஜனவரி மாதம் 1650 பாதணிகளும், பெப்ரவரி மாதம் 1406 பாதணி களும் உற்பத்தி செய்யப்பட்டன. இரு மாதங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட பாதணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

13. ஒருவருடைய மாத வருமானம் ரூபாய் 38750.00 ஆகும். அதில் ரூபாய் 16650.00 ஐ உணவுச் செலவுக்கும், ரூபாய் 12300.00 ஐ பிற செலவுகளுக்கும் பயன்படுத்தினார். அவரிடம் மீதியாக உள்ள பணம் எவ்வளவு?

.....


14. பாடசாலை ஒன்றில் 1235 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களில் 675 பேர் பெண்கள் எனில் ஆண்களின் எண்ணிக்கை யாது?

.....

www.lkedu.lk

Scanned with CamScanner

15. குறித்த ஒரு நாளில் தோட்டத்தில் பூத்த பூக்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளது.



(1) அன்று பூத்த ரோசாப் பூக்களின் எண்ணிக்கை முல்லைப் பூக்களின் எண்ணிக்கையின் அரைவாசி ஆகும். இதனை வரைபில் நிழற்றிக் காட்டுக.

(2) அன்று பூத்த பூக்களின் மொத்த எண்ணிக்கை யாது? .....

14. பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் கீழே கோடிடுக.

01. யாதேனும் ஒரு வேலையை உரிய நேரத்தில் செய்து முடிப்பதால் கிடைக்கும் நன்மை.
(1) வேலை அரைகுறையாக இருத்தல் (2) நேர்த்தியாகவும் நிறைவாகவும் இருத்தல்
(3) ஏனையோரின் கிண்டலுக்கு உள்ளாதல்

02. நூலகத்தில் நாம் நடந்து கொள்ள வேண்டிய சரியான நடத்தை எது?
(1) உரத்துப் பேசி ஏனையோருக்கு இடைஞ்சல் விளைவித்தல்
(2) அங்குமிங்குமாக நடந்து திரிதல்
(3) அமைதியாக ஏனையோருக்கு இடைஞ்சல் இன்றி நடத்தல்

03. அழகிய தோகையை உடைய பறவை எது?
(1) மயில் (2) வான்கோழி (3) தீக்கோழி

04. பின்வருவனவற்றுள் மிக வேகமாக ஓடக்கூடிய பறவை எது?
(1) காட்டுக்கோழி (2) மயில் (3) தீக்கோழி

05. அதிக நீர் அருந்தும் பறவை எது?
(1) கோழி (2) மயில் (3) புறா

06. கூர்மையான பார்வைத்திறன் உடைய பிராணி எது?
(1) ஆந்தை (2) புறா (3) கழுகு

07. கீழே தரப்பட்டுள்ள பிராணிகளுள் எட்டுக்கால்களைக் கொண்ட பிராணி எது?
(1) கரப்பான் (2) சிலந்தி (3) மட்டைத்தேள்

08. புரதக் குறைபாடு காரணமாக ஏற்படக்கூடிய நோய் எது?
(1) குவாசியக்கோர் (2) மாலைக்கண் (3) நெருப்புக்காய்ச்சல்

www.ikedu.lk
Scanned with CamScanner

09.  படத்தில் காணப்படுபவர் யார்?

(1) சித்திலெப்பை
(2) ஆதர்.சி.கிளார்க்
(3) ரி.பி.ஜாயா

10. இலங்கையின் தேசியப் பறவை எது?
(1) காட்டுக்கோழி (2) நெருப்புக்கோழி (3) கானாங்கோழி

11. ஒரு பிரதேசத்தில் தொற்றுநோய் பரவும் போது உடனடியாக யாருக்கு அறிவிக்க வேண்டும்?
(1) கிராம சேவகர் (2) பொதுச்சுகாதார பரிசோதகர் (3) வைத்தியர்

12.  படத்தில் காட்டப்பட்டுள்ள ஓவியம் வரையப்பட்டுள்ள இடம் எது?
(1) தலதாமாளிகை
(2) சிகிரியா
(3) யாப்பகூவை

13. அரசாங்கத்தால் எமக்கு இலவசமாகக் கிடைக்கும் சேவைகளுள் ஒன்று எது?
(1) மின்சாரம் (2) போக்குவரத்து (3) கல்வி


14. நீரின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் மாத்திரம் இடம்பெறும் விடை எது?
(1) தேங்காய், கடல்மாங்காய், புன்னை (2) துத்திரி, பருத்தி, தாமரை
(3) ஆமணக்கு, ஆடையொட்டி, புன்னை

15. கீழே தரப்பட்டுள்ள உபகரணங்களுள் தையல் வேலை செய்வோர் பயன்படுத்தாதது எது?
(1) தீதாள் (2) கத்தரிக்கோல் (3) அரம்

16. பின்வருவனவற்றுள் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த மாவட்டம் எது?
(1) கண்டி (2) மட்டக்களப்பு (3) கேகாலை

17. பின்வருவனவற்றுள் செவிப்புல சாதனமாக அமைவது எது?
(1) பத்திரிகை (2) வானொலி (3) தொலைக்காட்சி

18. வித்துக்களைப் பயன்படுத்தி செய்யப்படும் ஆக்கம் எது?
(1) கொலாஜ் (2) அல்பனா (3) அச்சுப்பதித்தல்

19.  இக்குறியீட்டின் மூலம் குறித்துக் காட்டப்படுவது எது?
(1) இப்பக்கம் மேலே
(2) இருவழிப் பாதை
(3) நேரே செல்லவும்

20. பலகையை அளுத்தமாகச் சீவுவதற்குப் பயன்படும் உபகரணம் எது?
(1) துறப்பணம் (2) சீவுளி (3) அரம்

21. வனைசில்லு பயன்படுத்தப்படுவது.
(1) வயல் வேலைகளில் (2) கம்மாலை வேலை (3) மட்பாண்டத் தொழில்

22. இலங்கையில் மரச்செதுக்கல் வேலைப்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற இடம்
(1) சிகிரியா (2) இசுறுமுனி விகாரை (3) எம்பக்கதேவாலயம்

www.kedul.lk
Scanned with CamScanner

23. பின்வரும் தாவரங்களுள் ஆணிவேருள்ள தாவரம் எது?



(1)



(2)



(3)

24. டெங்கு நோய் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) டெங்கு நோய் பரவுவதைத் தடுக்கலாம்.
(2) டெங்கு நோயைக் குணப்படுத்தலாம்.
(3) டெங்கு நோய் விற்றமின் குறைபாட்டினால் ஏற்படுகின்றது.

25. இலங்கையில் அமைந்துள்ள இயற்கைத் துறைமுகம் எது?
(1) கொழும்பு (2) காலி (3) திருகோணமலை

26. உலக சிறுவர் தினம் கொண்டாடப்படுவது.
(1) மே 1 (2) ஒக்டோபர் 1 (3) ஜனவரி 1

27. இலங்கையின் உள்நாட்டு சாதாரண தபால் கட்டணம் எவ்வளவு?
(1) ரூ.15.00 (2) ரூ.10.00 (3) ரூ.20.00

28. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அறிவிக்கவேண்டிய தொலைபேசி இலக்கம் எது
(1) 1929 (2) 1919 (3) 119

29. செம்மஞ்சள் நிறத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சேர்க்க வேண்டிய நிறங்கள்
(1) நீலம், சிவப்பு (2) சிவப்பு, மஞ்சள் (3) நீலம், மஞ்சள்

30. நீரில் இடும்போது அமிழும் திரவப்பொருள் எது?
(1) பெற்றோல் (2) டீசல் (3) இரசம்

15. இன்றைய உலகில் மனிதர்கள் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டிக்கொண்டிருக்கின்றனர். இருந்தபோதிலும் மனிதர்களுக்குச் சவாலாக அமையும் விதத்திலே தொற்று நோய்களும் பெரும் பீதியை ஏற்படுத்துகின்றன. அவற்றிலிருந்து எம்மை நாமே பாதுகாக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. ஆகவே **''தொற்றுநோய்களிலிருந்து எம்மைப் பாதுகாக்க நாம் செய்யக்கூடிய தடுப்பு முறைகள்"** என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

www.ikedu.lk

Scanned with CamScanner

ஆற்றல்

அகரம் Aharam

மாதிரிப் பரீட்சை - 2021

தொடர் - 8

தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

வினாத்தாள் - I

1 **மணித்தியாலம்**

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	


	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	


தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**

www.lkedu.lk


Scanned with CamScanner

01. வெற்றுக்கூட்டில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.





(1)




(2)




(3)


02. இக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.




.....



(1)




(2)



(3)

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள படங்களை ஏதாவது ஒரு தொடர்பின் அடிப்படையில் இரண்டு கூட்டங்களாக வகைப்படுத்த முடியும். அவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ள விடையின் கீழே கோடிடுக.


03.



A **B** **C** **D**

(1) **A:C , B:D** (2) **A:B , C:D** (3) **A:D , B:C**

04.



A **B** **C** **D**

(1) **A:C , B:D** (2) **A:B , C:D** (3) **A:D , B:C**

www.lkedu.lk

Scanned with CamScanner

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்கள் கருத்துள்ளனவாக அமைவதற்கு செய்யவேண்டிய மாற்றங்களைக் குறிக்கும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

05. வண்ணத்துப்பூச்சி றோசா மலரில் நீரைக் குடிக்கின்றது.

(1) வண்ணத்துப்பூச்சி என்பதற்குப் பதிலாக வண்டு என இடுதல்

(2) றோசா என்பதற்குப் பதிலாக மல்லிகை என இடுதல்.

(3) நீரை என்பதற்குப் பதிலாக தேனை என இடுதல்.


06. பிள்ளை வீதியில் பாடம் படிக்கின்றது.

(1) படிக்கின்றது என்பதற்குப் பதிலாக எழுதுகின்றது என இடுதல்.

(2) பாடம் என்பதற்குப் பதிலாக கட்டுரை என இடுதல்.

(3) வீதியில் என்பதற்குப் பதிலாக அறையில் என்பதை இடுதல்.

பின்வரும் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவுடன் தொடர்புடைய சொற்கள் மட்டும் அடங்கிய விடையின் கீழே கோடிடுக.

07. 

(1) மிருகம் , காடு , இறைச்சி

(2) மிருகம் , தாவரம் , வீடு

(3) மிருகம் , தாவரம் , பலமுள்ளது

08. 

(1) அறிவு , மாணவர் , பாடசாலை

(2) பொழுதுபோக்கு , மின்சாரம் , வீடு

(3) மாணவர் , செவிபுலம் , கல்வி

பின்வரும் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள படத்துடன் எந்தவிதத்திலும் தொடர்பற்ற சொல்லைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

09. 

(1) முட்டையிடும் (2) ஈரூடகவாழி (3) அடைகாக்கும்


10. 

(1) பறவை (2) பறக்கும் (3) இறக்கை அற்றது

www.lkedu.lk

Scanned with CamScanner

கீழே தரப்பட்டுள்ள சதுரமுகியானது அதன் ஆறு முகங்களும் நிறந்தீட்டப்பட்டதன் பின்னர் உருவில் காட்டியவாறு சிறிய சதுரமுகிகளாக வெட்டப்பட்டது. இதனை அடிப்படையாகக்கொண்டு கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




11. இரண்டு பக்கங்கள் மட்டும் நிறந்தீட்டப்பட்ட சதுரமுகிகள் எத்தனை?

(1) 12 (2) 24 (3) 8

12. ஒரு பக்கம் மட்டும் நிறந்தீட்டப்பட்ட சதுரமுகிகள் எத்தனை?

(1) 9 (2) 6 (3) 8

13. பின்வரும் உருவானது ஒரேயளவான சதுரமுகிக் குற்றிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?



(1) 16 (2) 17 (3) 18

சரியான ஒழுங்கில் அமைந்த விடையின் கீழ்க் கோடிடுக.

14. (1) மொட்டு → அரும்பு → பூ → காய் → பழம்

(2) அரும்பு → காய் → மொட்டு → பூ → பழம்

(3) அரும்பு → மொட்டு → பூ → காய் → பழம்

15. (1) நெல் → அரிசி → நெற்பயிர் → அரிசிமா → பலகாரம்

(2) அரிசி → அரிசிமா → பலகாரம் → நெற்பயிர் → நெல்

(3) நெற்பயிர் → நெல் → அரிசி → அரிசிமா → பலகாரம்

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தின் கீழ்க் கோடிக.

16. (1) அதிபர் காளையில் உரையாற்றினார்.

(2) அதிபர் காலையில் உறையாற்றினார்.

(3) அதிபர் காலையில் உரையாற்றினார்.

www.lkedu.lk


Scanned with CamScanner


17. (1) விவசாயி மன்னை வளமாக்கினார்.

(2) விவசாயி மண்ணை வழமாக்கினார்.

(3) விவசாயி மண்ணை வளமாக்கினார்.

18. உருக்களுக்கிடையிலான தொடர்பை அவதானித்து பெறுமதியைக் காணுங்கள்.





 இவ்வுருவின் பெறுமதி யாது?

(1) 21 (2) 22 (3) 19

19. ஒரு கூடையில் தோடம்பழங்களும் மாம்பழங்களுமாக 70 இருந்தன. தோடம்பழங்களின் எண்ணிக்கை மாம்பழங்களின் எண்ணிக்கையை விட 12 அதிகமாக உள்ளது. எனின் அங்குள்ள மாம்பழங்கள் எத்தனை?

(1) 29 (2) 41 (3) 55

கீழே தரப்பட்டுள்ள சொற்களில் இரண்டை ஒரு கூட்டமாகவும் மூன்றை ஒரு கூட்டமாகவும் ஆக்கலாம். அதில் இரண்டு இருக்கும் கூட்டத்திற்குரிய விடையைத் தெரிவு செய்க.

20. திங்கள் , சனி , சித்திரை , கார்த்திகை , புதன்

(1) சனி, சித்திரை (2) திங்கள், கார்த்திகை (3) சித்திரை, கார்த்திகை

21. வட்டம் , சதுரமுகி , சதுரம் , முக்கோணம் , கனவுரு

(1) வட்டம், சதுரமுகி (2) கனவுரு, சதுரமுகி (3) முக்கோணம், கனவுரு

22. பின்வருவனவற்றுள் இரு பக்கங்களும் சமனாக உள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) KLDYUAD = KADYUAB

(2) AADYUAB = AADYUAD

(3) KADYUAD = KADYUAD

www.lkedu.lk

Scanned with CamScanner


23. பின்வருவனவற்றுள் இரு பக்கங்களும் சமனாக அமையாத விடையைத் தெரிவு செய்க.

(1) LJKGFSFM = LJKGFSFM

(2) AADYUAB = AADYUAD

(3) KJKJGARY = KJKJGARY

24. பின்வரும் உருவில் அவதானிக்கக்கூடிய முக்கோணங்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை யாது?



(1) 20 (2) 22 (3) 24

பின்வரும் சொற்களில் உள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் இலக்கங்கள் இடப்பட்டுள்ளன. ஆனால் அவை அதே ஒழுங்கில் தரப்படவில்லை. இதனை அடிப்படையாகக் கொண்டு 25 ஆம் 26 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

அகரம் - 5216 **அதிபதி - 7537**

கடகம் - 6628 **நீதிபதி - 7397**

25. எழுத்து 'அ' இற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் எது?


(1) 5 (2) 1 (3) 6

26. எழுத்து 'ப' இற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் எது?

(1) 7 (2) 5 (3) 3

பின்வரும் வினாக்களில் செவ்வகவடிவக் கடதாசியில் தரப்பட்டுள்ளவாறு மை பூசப்பட்டு அவை எதிரே அச்சிடப்படுமாறு புள்ளிக்கோடு வழியே தாளை மடித்து விரிக்கும்போது தோன்றும் விடையின் கீழே கோடிடுக.

27.




(1) 

(2) 

(3) 

www.lkedu.lk

Scanned with CamScanner

28. 

(1) 

(2) 

(3) 

29. ஒரு சிறுவன் முதல் நாளில் ஓர் உண்டியலில் ரூ. 10 இடுகிறான். அதன் பின்னர் ஒவ்வொருநாளும் முந்திய நாளில் இட்ட பணத்திலும் பார்க்க ரூ 10 வீதம் கூடுதலாக இடுகின்றான். ஐந்தாவது நாளில் அவனது உண்டியலில் மொத்தமாக இருக்கும் பணம் எவ்வளவு?

(1) ரூ 50 (2) ரூ.150 (3) ரூ 120

30. ஒரு வரிசையில் 10 கதிரைகள் வீதம் 18 வரிசைகள் உள்ளன. இதனை வரிசைக்கு 12கதிரைகள் வீதம் மாற்றி அமைத்தால் எத்தனை வரிசைகள் அமைக்கலாம்?

(1) 15 (2) 12 (3) 16

31. எமது விளையாட்டுக்குழுவில் உள்ள அனைவரும் உயரமானவர்கள். ராகவன் எமது விளையாட்டுக் குழுவைச் சேர்ந்தவன் ஆகவே ராகவன் உயரமானவன் என்னும் கூற்று.

(1) சரியானது (2) பிழையானது (3) சரியாகக் கூறமுடியாது.

32. இன்று காலைக் கூட்டத்தின்போது மாணவன் ஒருவன் மயக்கமடைந்து நிலத்தில் விழுந்துவிட்டான் இதற்குக் காரணமாக இருக்கக்கூடியது.

(1) அவன் நேற்று மாலை வரை விளையாடியமை.
(2) கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் அவனுக்கு விருப்பமில்லாமல் இருந்தமை.
(3) அவன் காலை உணவை உண்ணாமல் பாடசாலைக்கு வந்தமை.

33. காகம் ஒரு பறவை. அது கறுப்பு நிறமுடையது. ஆகவே

(1) பறவைகள் எல்லாம் கறுப்பு நிறமுடையவை.
(2) கறப்பு நிறமுடைய பறவைகள் எல்லாம் காகங்கள் ஆகும்
(3) காகங்கள் எல்லாம் கறுப்பு நிறமுடையவை.

34. மிருகங்களுக்கு நான்கு கால்கள் உண்டு. யானை ஒரு மிருகம். ஆகவே

(1) மிருகங்கள் எல்லாம் யானைகள் ஆகும்.
(2) யானைகள் மட்டும் மிருகங்கள் ஆகும்
(3) யானை நான்கு கால்களுடைய மிருகமாகும்.

www.kedu.lk
Scanned with CamScanner

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு பெறுமானம் வழங்கப்பட்டுள்ளது. அதனை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

R	S	L	22
S	L	T	20
18	14	10	

35. R இன் பெறுமானம் யாது? (1) 8 (2) 10 (3) 6

36. S இன் பெறுமானம் யாது? (1) 4 (2) 10 (3) 8

போட்டிப் பரீட்சை ஒன்றில் 20 வினாக்கள் வழங்கப்பட்டன. சரியாக விடையளிக்கப்படும் ஒவ்வொரு வினாவிற்கும் 5 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். பிழையாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவிற்கும் அவர் பெற்ற புள்ளியிலிருந்து 2 புள்ளிகள் வீதம் கழிக்கப்படும். எனின்

37. 15 வினாக்களுக்குச் சரியான விடையளிக்கும் ஒருவர் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் எத்தனை?

(1) 75 புள்ளிகள் (2) 65 புள்ளிகள் (3) 70 புள்ளிகள்

38. இப்பரீட்சையில் ஒருவர் 58 புள்ளிகள் பெற்றார் எனின் அவர் சரியாக விடையளித்த வினாக்கள் எத்தனை?

(1) 11 வினாக்கள் (2) 13 வினாக்கள் (3) 14 வினாக்கள்

39. கடிகாரம் ஒன்று 2 மணியாகும் போது 2 தரம் ஒலிப்பதற்கு 2 செக்கன் எடுத்தது. அக்கடிகாரம் 5 மணியாகும் போது 5 தரம் ஒலிப்பதற்கு எத்தனை செக்கன் எடுக்கும்?

(1) 5 செக்கன் (2) 10 செக்கன் (3) 8 செக்கன்

40. பின்வரும் நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவு செய்க.

'பணம் இல்லாது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு நண்பன் ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தான்.

(1) ஆசை வெட்கம் அறியாது.

(2) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

(3) அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்.

www.lkedu.lk

Scanned with CamScanner

ஆற்றல்

அகரம் Aharam

மாதிரிப் பரீட்சை - 2021

தொடர் - 8

தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் உள்ள **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத் தாளிலேயே** தருக.
- சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கூறப்பட்ட ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- சரியான விடை எழுதப்படவேண்டிய ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**

www.Aaram.lk

Scanned with CamScanner

01. பின்வரும் பந்தியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

நீலவானைச் செந்நிறமாக்கிய கதிரவன், தன் பொற்கரங்களை நீட்டிப் பனித்துளிகளைத் தொட்டுச் செல்கிறான். கதிரவனின் பொற்கரம் பட்டதும் இலைகளின் நடுவே இரத்தினக் கற்களாக மின்னிய பனித்துளிகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின. கண்சிமிட்டி மலரும் கமல மலர்களும் ''தாயைக்கண்ட மழலையின் புன்முறுவல் '' போல இதழ்விரித்து மலர்கின்றன. மலர்களின் வாசம் கண்டு அவைகளைச் சுற்றிச் சுற்றி ரீங்காரமிடும் வண்டினங்கள் ஒருபுறம். வண்ண வண்ண இறக்கைகளால் சிறகடித்துப் பறந்து திரியும் வண்ணத்துப்பூச்சிகள் மறுபுறம். இவை சிறுவர்களைப் போன்று பெரியவர்களையும் பரவசமடையச் செய்கின்றன.

(1) இரத்தினக் கற்களாக மின்னியவை எவை?

.....

(2) அடைமொழி ஒன்று எழுதுக.

.....

(3) அடுக்குமொழி ஒன்று எழுதுக.

.....

(4) 'இதழ்விரித்து மலர்கின்றன' என்பது குறிக்கும் காலம் எது?

.....

(5) பூக்களை நாடிவரும் பிராணிகள் எவை?

.....

(6) பொற்கரம் என்னும் சொல்லைப் பிரித்தெழுதுக.

.....

02. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(1) உயிர் எழுத்துகள் எத்தனை?

(i) பதினெட்டு (ii) பன்னிரண்டு (iii) முப்பது

(2) மெய் எழுத்துகள் எத்தனை?

(i) முப்பது (ii) பதினெட்டு (iii) பன்னிரண்டு

(3) உயிர்மெய் எழுத்து எது?

(i) அ (ii) ப் (iii) கி

www.lkedu.lk

Scanned with CamScanner

சுட்டெண் :.....

03. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.

(1) வீரன் ..... (2) இளைஞன் .....

(3) குறவன் ..... (4) இடையன் .....

04. அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து எழுத்து வழக்குச் சொற்களைத் தெரிந்து கோடிடுக.

(1) இயற்கைப் பானமான (இளனி / இளநீர்) அருந்துதல் உடலுக்கு நன்மையைத் தரும்.

(2) நானும் தம்பியும் மாலை வேளையில் (தேநீர் / தேத்தண்ணி) அருந்துவோம்.

(3) மாலா (கத்திரிக்கோல் / கத்தரிக்கோல்) கொண்டு கடதாசியை வெட்டினாள்.

05. இறந்தகாலச் சொற்களின் கீழ்க் கோடிடுக.

(1) வரும் , செல்கின்றது , பறக்கும் , எழுதினார்

(2) ஏறுகிறது . பார்ப்போம் , மலர்ந்தது , பெய்கிறது

(3) உண்டேன் , குடிப்பாய் , பிறப்பார் , நீந்தும்

06. தொழிலைக் குறிக்கும் சொற்களை எழுதுக.

(01) ஆடு மேய்ப்பவன் - .....

(02) வாகனம் ஓட்டுபவன் - .....

(03) தேர் செலுத்துபவன் - .....

07. தரப்பட்ட வாக்கியங்களை வினா வாக்கியமாக மாற்றி எழுதுக.

(1) மான்கள் காட்டில் கூட்டமாகத் திரிந்தன.

.....

(2) நேற்றுப் பெய்த மழையால் வெள்ளம் ஏற்பட்டது.

.....

08. கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

(1) திறவுங்கள் ..... (2) தங்கை எங்கே? .....

www.lkedu.lk

Scanned with CamScanner

09. பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(1) சிக்குராதா ..... (2) பஹளொவ .....

10. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப்பதத்தை எழுதுக.

(1) rainbow ..... (2) Text book .....

11. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(1) வண்ணத்துப் பூச்சி ..... (2) தேசியப் பறவை .....

12. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(01) பின்வரும் எண்ணைச் சொற்களில் எழுதுக.

33023 :- .....

(02) 3 , 5 , 8 , 6 இவ்விலக்கங்களைக்கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணை எழுதுக.

.....

(03) கீழே தரப்பட்டுள்ள உரோமன் எண்களுக்குரிய இந்து அராபிய எண்களை எழுதுக.

(1) iii ..... (11) vii .....

(04) ஒரு நெற்களஞ்சியத்தில் 2750 நெற்சாக்குகளை இட்டுவைக்கமுடியும். இப்போது அங்கு 1945 நெற்சாக்குகள் உள்ளன. மேலும் எத்தனை நெற்சாக்குகளை அங்கு வைக்கமுடியும்?

.....

(05) ஒரு கூடையில் 140 மாம்பழங்கள் உள்ளன. அவ்வாறான 4 கூடைகளில் உள்ள மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(06) 8ℓ 500mℓ எண்ணெயிலிருந்து 4ℓ 650mℓ எண்ணெய் பயன்படுத்தப்பட்டால் எஞ்சியிருக்கும் எண்ணெயின் அளவு யாது?

.....

(07) அம்மா 5kg அரிசியும் 2kg கோதுமை மாவும் வாங்கினார். அவர் வாங்கிய பொருட்களின் மொத்த நிறையைக் g இல் எழுதுக.

.....

(08) வியாபாரி ஒருவர் 8m 50cm நீளமான றேந்தைத் துணியும் 5m 35cm நீளமான சீத்தைத் துணியும் விற்றார். அவர் விற்ற துணியின் மொத்த நீளம் யாது?

.....

www.lkedu.lk

Scanned with CamScanner

(09) பழப்பானத் தொழிற்சாலை ஒன்றில் உற்பத்தி செய்யப்பட்ட பழப்பானப் போத்தல்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

மாதம்	மாம்பழப்பானம்	தோடம்பழப்பானம்
சனவரி	1485	1398
பெப்ரவரி	970	895
மார்ச்	2139	3246


(i) சனவரி மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்தப் பழப்பானப் போத்தல்கள் எத்தனை?

.....

(ii) மூன்று மாதங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட தோடம்பழப் பானப்போத்தல்கள் எத்தனை?

.....

(10) கீழே தரப்பட்டுள்ள பென்சிலின் நீளத்தை எழுதுக.




.....

(11) 6 பென்சில்கள் வீதம் உள்ள ஐந்து பெட்டிகளும் 7 பென்சில்கள் வீதம் உள்ள நான்கு பெட்டிகளும் உள்ளன. 9 பெட்டிகளிலும் உள்ள பென்சில்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(12) தந்தையார் மு.ப.9.15 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்டு பி.ப.3.25 இற்குத் திரும்பி வந்தார். அவர் வீட்டிலிருந்து புறப்பட்டு எவ்வளவு நேரத்தின் பின்னர் திரும்பி வந்தார்?

.....

(13) 

இவ்வுருவில் அவதானிக்கக்கூடிய செங்கோணத்திலும் குறைந்த கோணங்கள் எத்தனை?

.....


(14) ஒரு புத்தகத்தின் விலை ரூ. 65.00 வீதம் இரண்டு புத்தகங்களும் ஒரு பேனை ரூ.12.50 வீதம் மூன்று பேனைகளும் வாங்கிய அமுதா கடைக்காரரிடம் ரூ.100.00 பணத்தாள்கள் இரண்டைக் கொடுத்தாள்.

(i) அவள் வாங்கிய பொருட்களுக்காகக் கொடுக்கவேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

.....

(ii) கடைக்காரர் அவளுக்குக் கொடுக்கவேண்டிய மீதிப் பணம் எவ்வளவு? .....

www.lkedu.lk
Scanned with CamScanner

(15) 

இவ்வுருவில் $^1/_3$ பங்கிற்கு நிறந்தீட்டுக.

13. பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. குப்பைகள், மரங்கள் போன்றவற்றை உக்கலடையச் செய்யும் பிராணி எது?
(1) கறையான் (2) பாம்பு (3) எலி

02. முயல் விரும்பி உண்ணும் தாவரம் எது?
(1) பாலறுகு (2) சிறுபுல்லடி (3) கோரை

03. ஆகாயத்தோட்டி என அழைக்கப்படும் பிராணி எது?
(1) காகம் (2) புளுனி (3) வெளவால்

04. காலில் குளம்பு காணப்படும் மிருகம் எது?
(1) நாய் (2) ஆடு (3) யானை

05. இரும்புச் சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
(1) கண்டமாலை (2) ஸ்கேவி (3) குருதிச்சோகை

06. 

உருவில் தரப்பட்டுள்ள கால் எப்பறவையினுடையது?

(1) கோழி (2) மரங்கொத்தி (3) பருந்து


07. இலங்கையில் முதன் முதலில் கட்டப்பட்ட குளம் எது?
(1) அபயவாவி (2) திஸ்ஸ வாவி (3) மின்னேரியாக் குளம்

08. 

படத்தில் காட்டப்பட்டுள்ளவரைப் பற்றிய சரியான கூற்று.
(1) சிறந்த எழுத்தாளர்
(2) சிறந்த அரசியல்வாதி
(3) இலங்கையின் சுதந்திரப் போராட்ட வீரர்

09. பம்பரகந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ள நதி எது?
(1) கிரிந்தி ஓயா (2) மகாவலி கங்கை (3) வளவ கங்கை

10. நாற்று மேடைகளில் இருந்து கன்றுகள் பெறப்படும் பயிர்வகை
(1) பாகல், பயற்றை, வெண்டி (2) கத்தரி, தக்காளி, கறிமிளகாய்
(3) கறிமிளகாய், வெண்டி, உருளைக்கிழங்கு

11. 

இவ்வுபகரணத்தின் பயன்பாடு.
(1) காற்றின் வேகத்தை அறிதல்.
(2) காற்று வீசும் திசையை அறிதல்
(3) வளிமண்டல அமுக்கத்தை அறிதல்


www.lkedu.lk

Scanned with CamScanner

12. உணவைப் பாதுகாக்கும் பாரம்பரிய முறையில் அடங்காதது.
(1) உலர வைத்தல் (2) வற்றலாக்குதல் (3) குளிரூட்டியில் வைத்தல்

13. ஒரு போத்தலில் வெவ்வேறு இடங்களில் ஒரே அளவான துளைகள் இடப்பட்டு அதனுள் நீரை இடும்போது அவதானிக்கக் கூடிய சரியான தோற்றம் எது?


(1)


(2)


(3)

14. நீர்வெறுப்பு நோய் பரவக் காரணமாக அமையாத பிராணி எது?
(1) நாய் (2) நரி (3) கோழி

15. இலங்கையில் கடற்கரையுடன் தொடர்பற்ற ஒரு மாகாணம்.
(1) கிழக்கு மாகாணம் (2) தென் மாகாணம் (3) வடமத்திய மாகாணம்

16. பின்வருவனவற்றுள் கால வேறுபாடின்றிப் பூப்பூக்கும் தாவரம் எது?
(1) பூவரசு (2) இலுப்பை (3) தென்னை

17. காணாமல் போன தேசிய அடையாள அட்டை தொடர்பான சான்றிதழைப் பெறுவதற்குச் செல்லவேண்டியது.
(1) பொலிஸ் நிலையம் (2) கிராம அலுவலரிடம் (3) சமாதா நீதவானிடம்

18. காந்தத் துண்டை நோக்கிக் கவரப்படும் பொருள்.
(1) இரும்பு (2) வெள்ளி (3) அலுமினியம்

19. கையில் ஒட்டிய பலாக்காய்ப் பாலை எளிதாக அகற்றப் பயன்படுத்தக்கூடிய பொருள்.
(1) சவர்க்காரம் (2) வெந்நீர் (3) தேங்காயெண்ணெய்

20. 
இக்குறியீடு உணர்த்துவது.
(1) ஆண்கள் மலசலகூடம் (2) பெண்கள் மலசலகூடம்
(3) ஆண், பெண் மலசலகூடம்

21. தெறியோட்டை தைப்பதற்குப் பயன்படுத்தப்படும் தையல் முறை.
(1) கம்பளித் தையல் (2) சிறுநூலோடி (3) விஸ்பம்

22. பின்வருவனவற்றுள் தேசிய அடையாளமாக அமையாதது.
(1) நாகமரம் (2) காட்டுக்கோழி (3) நிறைகலசம்

23. 
படத்தில் தரப்பட்டுள்ள விளையாட்டு எது?
(1) வொலிபோல் (2) வலைப்பந்து (3) கூடைப்பந்து

www.lkedu.lk
Scanned with CamScanner

24. இலங்கை குடியரசான வருடம் எது?
(1) 1945 (2) 1948 (3) 1972

25. பூச்சி பீடைகளை விரட்ட விசாயிகள் மேற்கொள்ளும் பாரம்பரிய முறை அல்லாதது.
(1) கிருமிநாசினி தெளித்தல் (2) புகையூட்டுதல்
(3) முசுற்றுக் கூட்டை போடுதல்

26. பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பசளை எது?
(1) ஆட்டெரு (2) மாட்டெரு (3) யூரியா

27. சுவர் ஒன்றை நிலைக்குத்தாகக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் உபகரணம் எது?
(1) மணியாசு (2) நீர்மட்டம் (3) தூக்குக்குண்டு

28. 
இச்சின்னம் குறித்து நிற்பது.
(1) இலங்கை வங்கி
(2) இலங்கை மத்திய வங்கி
(3) மக்கள் வங்கி

29. ஈ - மெயில் என்பதன் தமிழ் வடிவம்.
(1) இணையம் (2) மின்னஞ்சல் (3) தொலைநகல்

30. வெசாக் பண்டிகையைக் கொண்டாடும் மதத்தினர்.
(1) இந்துக்கள் (2) இஸ்லாமியர் (3) பௌத்தர்

14. ''நல்ல ஆசிரியரின் கடமைகள்'' என்னும் தலைப்பில் பொருத்தமான மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

www.lkedu.lk

Scanned with CamScanner

ஆற்றல்

அகரம் Aharam

மாதிரிப் பரீட்சை - 2021

தொடர் - 9

தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	


	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**

www.iketh.lk


Scanned with CamScanner

01. பின்வரும் உரு பூரணமாவதற்கு தேவையான உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

02. பின்வரும் உருவில் வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள படங்களை ஏதாவது ஒரு தொடர்பின் அடிப்படையில் மூன்று கூட்டங்களாக வகைப்படுத்த முடியும். அவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ள விடையின் கீழே கோடிடுக.


03.



A B C D E F

(1) AD | BE | CF (2) AD | BF | CE (3) AE | BD | CF

04.



A B C D E F


(1) AB | CE | DF (2) AD | BF | CE (3) AD | BE | CF

www.1edu.lk

Scanned with CamScanner

கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு எல்லாச் சொற்களுடனும் பொருந்துகின்ற விடையைத் தெரிவு செய்க.

05. அழகு , மென்மை , சுவை



(1)



(2)




(3)

06. நன்றி , பாதுகாப்பு , வீடு



(1)



(2)



(3)

பின்வரும் சொற்கூட்டங்களுள் ஒரு சொல் ஏனையவற்றிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. அச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

07. (1) சதுரம் (2) செவ்வகம் (3) சதுரமுகி (4) முக்கோணம்

08. (1) ஆசிரியர் (2) மாணவன் (3) அதிபர் (4) வைத்தியர்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஆறு சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு சொற்கள் ஏனையவற்றிலிருந்து வேறுபடுகின்றன. அவற்றின் கீழே கோடிடுக.

09. சிங்கம் , மீன் , மனிதன் , காகம் , இறால் , நாய்

(1) சிங்கம், மனிதன் (2) மீன், இறால் (3) காகம், நாய்

10. ஊன், உணவு, ஊண், பானம், ஆகாரம், சாப்பாடு

(1) ஊண், பானம் (2) ஊன், பானம் (3) ஆகாரம், உணவு

பின்வரும் வினாக்களுக்கு வெற்றிடத்தில் வரவேண்டிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

11. C A X என்பது D E Y ஆயின் B T R என்பது:- .....

(1) C X S (2) C V S (3) C X T


12. A B C என்பது 1 2 3 ஆயின் E B A என்பது:- .....

(1) 5 1 2 (2) 1 2 5 (3) 5 2 1


www.ikeduk.lk

Scanned with CamScanner


13. குறைந்தளவு தொடர்புடைய உருக்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.



(1)




(2)




(3)


14. ஒன்றுக்கொன்று மிகவும் நெருங்கிய தொடர்புடைய உருக்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

சரியான ஒழுங்கில் அமைந்த விடையின் கீழ்க் கோடிடுக.

15. (1) பந்தி → எழுத்து → சொல் → வாக்கியம் → கட்டுரை

(2) வாக்கியம் → பந்தி → கட்டுரை → எழுத்து → சொல்

(3) எழுத்து → சொல் → வாக்கியம் → பந்தி → கட்டுரை

16. (1) மில்லிமீற்றர் → சென்ரிமீற்றர் → மீற்றர் → கிலோமீற்றர்

(2) சென்ரிமீற்றர் → மீற்றர் → மில்லிமீற்றர் → கிலோமீற்றர்

(3) மீற்றர் → கிலோமீற்றர் → மில்லிமீற்றர் → சென்ரிமீற்றர்

17. ஒரு கிராமத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகம் பேர் காணப்பட்டனர். இதற்குக் காரணம்.

(1) அவர்கள் கல்வி கற்காதிருந்தமை.

(2) டெங்கு நுளம்புகள் பெருகக்கூடியதாக நீர்நிலைகள் காணப்பட்டமை.

(3) இக்கிராமத்தில் வைத்தியசாலைகள் இல்லாதிருந்தமை.

www.lkedu.lk

Scanned with CamScanner

18. சந்தையில் இன்று மரக்கறிகளின் விலை மிக அதிகமாக இருந்தது. இதற்குக் காரணம்.

(1) சந்தையில் அளவுக்கதிகமாக மரக்கறிகள் காணப்பட்டமை.

(2) கூடுதலானவர்கள் மீன் வாங்கியமை.

(3) சந்தையில் மரக்கறிகள் குறைவாக இருந்தமை.

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்கள் கருத்துள்ளனவாக அமைவதற்கு செய்யவேண்டிய மாற்றங்களைக் குறிக்கும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

19. ஆமை மண்ணைத்தோண்டி குட்டி ஈன்றது.

(1) ஆமை என்பதற்குப் பதிலாக முதலை என இடுதல்.

(2) குட்டி ஈன்றது என்பதற்குப் பதிலாக முட்டை இட்டது என இடுதல்.

(3) குட்டி என்பதற்குப் பதிலாக கன்று என இடுதல்.

20. மீனவன் வயலில் மீன் பிடித்தான்.


(1) மீன் என்பதற்குப் பதிலாக இறால் என இடுதல்.

(2) மீனவன் என்பதற்குப் பதிலாக உழவன் என இடுதல்.

(3) வயலில் என்பதற்குப் பதிலாக கடலில் என இடுதல்.


தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

21.






(1)




(2)




(3)


22.








(1)



(2)



(3)

www.lkedu.lk

Scanned with CamScanner

23. பின்வரும் கூற்றுக்களில் ஒருவரின் தனிப்பட்ட கருத்தாக அமையக்கூடியது எது?

(1) சதுரத்திற்கு நான்கு பக்கங்கள் உண்டு.

(2) சூரியன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறையும்.

(3) மாம்பழத்தை விடவும் அப்பிள் பழம் சுவையாக இருக்கும்.

24. ஆலய மணி கணீர் கணீர் என ஒலித்தது. இங்கு கணீர் கணீர் என்பது.

(1) அடை மொழி (2) அடுக்கு மொழி (3) இரட்டைக் கிளவி

25. சந்தையிலே காய்கறிகள் வாடி வதங்கிக் காணப்பட்டன. இங்கு வாடி வதங்கி என்பது.

(1) இணைமொழி (2) அடுக்கு மொழி (3) அடை மொழி

26. அமலனின் ஊருக்கு ஒரு பேருந்து மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றது. காலையில் பாடசாலை மாணவர்களையும் வேலைக்குச் செல்பவர்களையும் ஏற்றி வரும் பேருந்து மாலை ஐந்து மணிக்கு மீண்டும் அவனது ஊருக்குத் திரும்பிச் செல்லும். தினமும் தவறாது பாடசாலைக்குப் பேருந்தில் வரும் அமலன் இன்று பாடசாலைக்கு வரவில்லை. அவன் பாடசாலைக்குச் சமுகமளிக்காமைக்குக் காரணமாக இருக்கக்கூடியது.

(1) பேருந்து தரிப்பிடத்தில் நிற்காமல் சென்றமை.

(2) பேருந்து சேவையில் ஈடுபடாமை.

(3) பேருந்தை அவன் தவற விட்டமை.

27. பின்வரும் புதிரில் ஒளிந்திருக்கும் விடையைத் தெரிவு செய்க.

முதலாவது எழுத்து கரத்தில் உண்டு மரத்தில் இல்லை. இரண்டாவது எழுத்து தடியில் உண்டு தலையில் இல்லை. மூன்றாவது எழுத்து கதவில் உண்டு கனவில் இல்லை. நான்காவது எழுத்து கம்பியில் உண்டு கப்பியில் இல்லை.

(1) சரிதம் (2) கலகம் (3) கடிதம்

28. கீதா பணக்காரவீட்டுப் பிள்ளை. அவள் சிறுவர் சஞ்சிகைகள், சித்திரக் கதைகள் எனப் பலவற்றைப் பாடசாலைக்குக் கொண்டு வருவாள். அவற்றை ஏனைய மாணவர்களுக்குக் காட்டுவாள். ஆனாலும், யாருக்கும் வாசிக்கக் கொடுக்க மாட்டாள்.

(1) பொதுநலவாதி (2) சுயநலவாதி (3) வள்ளல்

www.lkedu.lk

Scanned with CamScanner

29. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும் போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது. இதற்குக் காரணம்.

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்லவேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

30. சாருமதியின் அண்ணன் பொது அறிவு வினாக்களுக்கு விடையளிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். அவனை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஒரு நாள் சுமதியின் வீட்டிற்கு வந்த நண்பியின் தங்கை கேட்ட பொது அறிவுக் கேள்விக்கு சுமதியின் அண்ணனால் விடை கூற முடியவில்லை. இந்நிகழ்விற்குப் பொருத்தமான பழமொழி.

(1) நிறைகுடம் தளம்பாது.

(2) ஆனைக்கும் அடி சறுக்கும்.

(3) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

31. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' இப்பழமொழிக்குப் பொருத்தமான கருத்து.
(1) விடாமுயற்சி பலன் தரும்.
(2) பலசாலியும் தோல்வியடையலாம்.
(3) ஒற்றுமையே பலம்.


32. புள்ளிக்கோடிட்ட பகுதிக்குப் பொருத்தமான விடையியைத் தெரிவு செய்க.

பழுத்தது வாழை
வெடித்தது தாழை
பெட்டிதான் .....

(1) நாளை (2) பேழை (3) வேளை

33. கபிஷா, விதுஷா, அபிஷா ஆகிய மூவரும் உயரமானவர்கள். கண்ணன், காவியன் ஆகிய இருவரும் உயரம் குறைந்தவர்கள். காவியனும் கபிஷாவும் தேநீர் அருந்துவதில்லை. இவர்களில் யார் தேநீர் அருந்துபவரும் உயரம் குறைந்தவரும் ஆவார்?

(1) அபிஷா (2) கண்ணன் (3) காவியன்

34. 

உருவின் உள்ளே இருக்கும் சிறிய சதுரங்கள் அனைத்தும் ஒரே அளவினைக் கொண்டவை. முழு உருவில் நிறந்தீட்டப்பட்ட சதுரத்தின் அளவினைக் கொண்ட எத்தனை சதுரங்களைப் பெறலாம்?

(1) 20 (2) 24 (3) 25

www.lkedu.lk
Scanned with CamScanner

35. நகரங்கள் A, B ஆகியவற்றுக்கு இடையிலான தூரம் 80 கிலோமீற்றர் ஆகும். நகரம் A இல் இருந்து ஒருவர் நகரம் B ஐ நோக்கி மணிக்கு 40 கிலோமீற்றர் என்னும் வேகத்தில் மோட்டார்சைக்கிளில் பயணம் செய்தார். அவர் நகரம் A இல் இருந்து மு.ப.10.30 மணிக்கு பயணத்தை ஆரம்பித்தால் நகரம் B ஐச் சென்றடையும் நேரம் என்ன?

(1) மு.ப.12.30 (2) பி.ப.12.30 (3) பி.ப.1.30

36. மண்டபமொன்றில் 200 ஆசனங்கள் உள்ளன. அதில் அரைவாசியில் ஆண்களும் மீதியில் அரைவாசியில் பெண்களும் அமர்ந்திருந்தனர். அங்கிருந்த வெற்று ஆசனங்கள் எத்தனை?

(1) 50 (2) 100 (3) 75

37. 10m நீளமான கம்பி ஒன்றை சம அளவுடைய 10 துண்டுகளாக வெட்டுவதற்கு எத்தனை இடங்களில் வெட்டவேண்டும்?

(1) 9 இடங்களில் (2) 10 இடங்களில் (3) 11 இடங்களில்

38. நான்கு புதன் கிழமைகளைக் கொண்ட தை மாதம் ஒன்றில் அப்புதன் கிழமைகளின் திகதிகளின் கூட்டுத் தொகைக்கு இருக்கக்கூடிய உயர்ந்தபட்ச பெறுமதி யாது?

(1) 70 (2) 75 (3) 80

39. 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனின், மார்ச் 15 ஆம் திகதி என்ன கிழமை?

(1) திங்கள் (2) ஞாயிறு (3) சனி

40. பேனை ஒன்றினதும் பென்சில் ஒன்றினதும் விலை ரூபாய் 39.00 ஆகும். ஒரு பேனையின் விலை ஒரு பென்சிலின் விலையிலும் ரூபாய் 11.00 அதிகமாகும். எனின் ஒரு பென்சிலின் விலை யாது?

(1) ரூபாய் 25.00 (2) ரூபாய் 14.00 (3) ரூபாய் 28.00

www.lkedu.lk

Scanned with CamScanner

ஆற்றல்

அகரம் Aharam

மாதிரிப் பரீட்சை - 2021

தொடர் - 9

தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் உள்ள **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத் தாளிலேயே** தருக.
- சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கூறப்பட்ட ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- சரியான விடை எழுதப்படவேண்டிய ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**

www.kalvi.lk

Scanned with CamScanner

01. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

கருத்துப் பரிமாற்றத்திற்குத் தகவல் தொடர்பு மிக அவசியமாகும். எந்த அறிவியல் வளர்ச்சியும் இல்லாத காலங்களில் வேலையாட்கள்தான் செய்தி கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டார்கள். அவர்கள் நடந்து சென்றார்கள். அல்லது குதிரையில் பயணித்தார்கள். அரசனுக்கு அரசன் ஓலையில் எழுதி அனுப்பும் செய்தியைக் கொண்டு சென்றவர்கள் ''ஓலை தாங்கிகள்'' என்று அழைக்கப்பட்டார்கள்.

(1) ஓலையில் எழுதி அனுப்பப்படும் செய்தியைக் கொண்டு சென்றவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்கள்?

.....

(2) கருத்துப் பரிமாற்றத்திற்கு மிக அவசியமானது எது?

.....

(3) செய்தியைக் கொண்டு சென்றவர்கள் எவ்வாறு பயணித்தார்கள்?

.....

(4) மடக்கேறு, கீழ்க்கால் ஆகிய உயிர்க்குறிகள் இடம்பெற்றுள்ள சொல் எது?

.....

(5) 'அழைக்கப்பட்டார்கள்' என்பதை எதிர்காலத்தில் மாற்றி எழுதுக.

.....

(6) உயர்திணை ஆண்பாற் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

.....

02. இடைவெளிகளில் வரவேண்டிய எழுத்துக்களை எழுதுக.

(1) வி ..... ஞா ..... (2) தீர் .... ம்

03. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

(1) ''கடிகாரம்'' அ.ஃறிணைப் பன்மைப் பெயர்ச் சொல்லாகும். (.....)

(2) ''மலர்கள்'' உயர்திணை ஒருமைப் பெயர்ச் சொல்லாகும். (.....)

(3) ''விசிறிகள்'' அ.ஃறிணைப் பன்மைப் பெயர்ச் சொல்லாகும். (.....)

www.lkedu.lk

Scanned with CamScanner

சுட்டெண் :.....

04. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.

(1) காச்சல் , காய்ச்சல் , காய்சல் , காட்சல்

(2) சீகைக்காய் , சீயாக்காய் , சிகைக்காய் , சியாக்காய்

(3) கத்தரிக்கோல் , கத்திரிக்கோல் , கத்தறிக்கோல் , கத்திறிக்கோல்

05. பின்வரும் தொடர்வாக்கியத்தைத் தனிவாக்கியங்களாக எழுதுக.

(1) செல்வி காலையில் எழுந்து கருத்துடன் கற்றாள்.

.....

.....

06. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

(1) பறவைகள் குஞ்சுகளுக்கு உணவு ..... (ஊட்டியது , ஊட்டின)

(2) தோட்டத்தில் பூக்கள் ..... (மலர்ந்தது , மலர்ந்தன)

07. பின்வரும் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக எழுதுக.

(1) குருவி தானியங்களைக் கொத்தித் தின்றது.

.....

(2) நான் கல்விச்சுற்றுலா சென்றேன்.

.....

08. பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவை எழுதுக.

(1) கூ.மொ.வி.நி - .....

(2) இ.பு.தி - .....

(3) க.பொ.த - .....

09. பின்வரும் பிராணிகளின் தொனிகளை எழுதுக.

(1) தேனீ - ..... (2) பல்லி - .....

www.lkedu.lk

Scanned with CamScanner

10. கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

(1) புகையிரத நிலையம் ..... (2) ஓடுங்கள் .....

11. பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தழிழ்ச் சொற்களை எழுதுக.

(1) அம்மா இன்னவா. ..... (2) நங்கி எலியே .....

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப்பதத்தை எழுதுக.

(1) string hoppers .....

(2) national dress .....

13. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(1) சிலந்தி ..... (2) துவிச்சக்கரவண்டி .....

14. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(01) பின்வரும் எண்ணைச் சொற்களில் எழுதுக.

29609 :- .....


(02) கீழே தரப்பட்டுள்ள எண்களில் மிகச் சிறிய எண்ணைத் தெரிவு செய்து எழுதுக.

2351 , 2802 , 2346 , 6548 .....

(03) பின்வரும் கணிதச் செய்கைகளுக்குரிய விடையை உரோமன் எண்ணில் எழுதுக.

(i) vi + vii = ... (ii) xi - vi = ...

(04) கீழே தரப்பட்டுள்ள உருவின் அரைப்பங்கை நிறைந்தீட்டுக.



(05) நாடகமொன்றுக்குச் செலவாகிய நேரம் 2 மணித்தியாலம் 15 நிமிடம் ஆகும். அந்த நாடகம் ஆரம்பமாகிய நேரம் 15:10 ஆயின் அது முடிவடைந்த நேரம் என்ன?

.....

(06) தோட்டம் ஒன்றில் 640 பழமரக் கன்றுகளை நாட்ட முடியும். தற்போது 375 பழமரக் கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன. தோட்டம் முழுவதுமாக நாட்டுவதற்கு மேலும் எத்தனை பழமரக்கன்றுகள் தேவை?

.....

www.lkedu.lk

Scanned with CamScanner

(07) குவியலொன்றில் 285 தேங்காய்கள் உள்ளன. இவ்வாறான 3 குவியல்களில் உள்ள தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(08) 8ℓ கொள்ளக்கூடிய பாத்திரத்தில் 5ℓ 350mℓ நீர் உள்ளது. அதனை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் தேவையான நீரின் அளவு யாது?


.....

(09) வியாபாரி ஒருவர் முதல் நாளில் 8kg சீனியும் இரண்டாம் நாளில் 7kg 750g சீனியும் விற்றார். அவர் இரண்டு நாட்களிலும் விற்ற சீனியின் மொத்த நிறை யாது?

.....

(10) ஒருவர் முதல் நாளில் **15m 20cm** நீளமான கயிற்றையும் அடுத்த நாளில் **20m 75cm** நீளமான கயிற்றையும் திரித்தார். அவர் திரித்த கயிற்றின் மொத்த நீளம் யாது?

.....

(11) 


இச்சதுரமுகியின் ஒரு விளிம்பின் நீளம் 12cm ஆகும். இதிலிருந்து 4cm விளிம்பினைக் கொண்ட எத்தனை சதுரமுகிகளை வெட்டமுடியும்?

.....

(12) பின்வரும் விலைப்பட்டியலிலுள்ள வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

பொருள்	அளவு	ஒன்றின் விலை	மொத்த விலை
		ரூ சதம	ரூ சதம
அரிசி	3kg	.....	255 00
பருப்பு	750g	225 00	.....
எண்ணெய்	250ml	185 00	.....
சவர்க்காரம்	5	.....	215 00
மொத்தம்			685 00

(13) கீழே தரப்பட்டுள்ள வடிவங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய திண்ம வடிவம் எது?




.....

www.ikedu.lk

Scanned with CamScanner

(14) 5 மணி கழிந்து 45 நிமிடம் என்பதை இக்கடிகார முகத்தில் குறித்துக் காட்டுக.



15. பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. பின்வருவனவற்றுள் பறக்கமுடியாத பறவை எது?
(1) காட்டுக்கோழி (2) பென்குயின் (3) ஆந்தை

02. மிக உயரமான மிருகம் எது?
(1) யானை (2) ஒட்டகம் (3) ஒட்டகச்சிவிங்கி

03. எதிரொலியைப் பயன்படுத்தி நடமாடும் பிராணி எது?
(1) பாம்பு (2) வௌவால் (3) ஆந்தை

04. முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதன் மூலம் தனது இனத்தைப் பெருக்கும் பிராணி
(1) எலி (2) வௌவால் (3) ஆமை

05. எலியின் உடலில் வாழும் தெள்ளு மூலமாக ஏற்படும் நோய் எது?
(1) டெங்கு (2) பிளேக் நோய் (3) பறவைக்காய்ச்சல்

06. அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய் பின்வருவனவற்றுள் எது?
(1) மலேரியா (2) நெருப்புக்காய்ச்சல் (3) பிளேக்

07. கடதாசிகளைக் கிழித்து ஒட்டுவதன் மூலம் செய்யப்படும் ஆக்கம் எது?
(1) கொலாஜ் (2) அல்பனா (3) அச்சுப்பதித்தல்

08. மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்த மன்னன் யார்?
(1) மகாசேனன் (2) தாதுசேனன் (3) பண்டுகாபயன்

09. சிவப்பு நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் சேர்ப்பதால் பெற்றுக்கொள்ளக்கூடிய நிறம் எது?
(1) பச்சை (2) செம்மஞ்சள் (3) ஊதா

10. 
அருகில் தரப்பட்டுள்ள விளையாட்டு எது?
(1) வொலிபோல் (2) வலைப்பந்து (3) கிரிக்கெட்

12. துவிச்சக்கர வண்டியின் விளக்கிற்கு மின்னை வழங்குவது.
(1) மின்கலம் (2) தைனமோ (3) மின்காந்தம்

13. 
படத்தில் காணப்படுபவர்.
(1) இலங்கையின் முதலாவது பிரதமர்
(2) இலங்கையின் முதலாவது கல்வியமைச்சர்
(3) இலங்கையின் முதலாவது சனாதிபதி

www.ikedu.lk


Scanned with CamScanner


14. சூழல்நேய பூச்சிக் கட்டுப்பாட்டுத் திரவத்தைத் தயாரிக்கப் பயன்படும் வித்து.
(1) வேம்பு (2) ஆமணக்கு (3) பப்பாசி

15. தண்டுகோதிப் புழுவினால் பாதிக்கப்படும் தாவரம்.
(1) கத்தரி (2) வெண்டி (3) நெல்

16. பின்வருவனவற்றுள் பௌத்த சமயத்தினைக் குறிக்கும் அடையாளம் எது?


(1)



(2)


(3)

17. குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு மட்டும் தகவல் வழங்கப் பொருத்தமானது.
(1) வானொலி (2) தொலைக்காட்சி (3) ஒலிபெருக்கி

18. 
படத்தில் காட்டப்பட்டுள்ள தாவரம் எது?
(1) பூவரசு (2) மிளகு (3) கொத்தமல்லி

19. பின்வருவனவற்றுள் கால வேறுபாடின்றிப் பூப்பூக்கும் தாவரம் எது?
(1) வாழை (2) பாலை (3) நாவல்

20. 
இவ்வுபகரணத்தை ஆக்குவதற்குப் பயன்படாத பொருள்.
(1) மின்கலம்
(2) இரும்பாணி
(3) இறப்பர்த்துண்டு

21. பின்வரும் எப்பிராணியின் பெருக்கம் சூழல் சமநிலையைப் பாதிக்கும்?
(1) யானை (2) ஒட்டகம் (3) மான்

22. பொலனறுவை மாவட்டம் அமைந்துள்ள மாகாணம் எது?
(1) வடமத்திய மாகாணம் (2) வடமேல் மாகாணம் (3) ஊவா மாகாணம்

23. நிலத்தைத் தோண்டி முட்டையிடும் பறவை எது?
(1) தீக்கோழி (2) பருந்து (3) கிவி

24. நூகர் பொருட்களுக்கான இலங்கையின் தரச்சான்று எது?
(1) SLS (2) ISO (3) ISBN

25. காசோலை ஒன்றினைப் பணமாக மாற்றிப் பெறுவதற்குச் செல்ல வேண்டிய இடம்.
(1) வங்கி (2) தபாலகம் (3) பிரதேசசபை அலுவலகம்

26. கிளைத் துண்டுகளை நடுவதன் மூலம் புதிய கன்றுகளைப் பெறக்கூடிய தாவரம் அல்லாதது.
(1) கங்குன் (2) பசளி (3) பப்பாசி

www.kedu.lk

Scanned with CamScanner

27. 

படத்தில் காணப்படுவது.

(1) யாப்பகூவ கோட்டை
(2) தலதா மாளிகை
(3) அபயகிரி விகாரை

28. பின்வருவனவற்றுள் சமைக்காது பச்சையாக உண்ணக்கூடியது.
(1) கரட் (2) பாகற்காய் (3) பூசணிக்காய்

29. தேசப்படங்களில் மேட்டு நிலங்களைக் குறித்துக்காட்டப் பயன்படும் நிறம் எது?
(1) சிவப்பு (2) கறுப்பு (3) கபிலம்

30. பொருளாதார நன்மை கருதி வளர்க்கப்படும் பிராணி அல்லாதது எது?
(1) கோழி (2) தேனீ (3) கிளி

16. பின்வரும் படத்தைப் பார்த்து மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(வாக்கியங்கள் நிகழ்காலத்தில் அமைதல் வேண்டும்)



1. .....

.....

2. .....

.....

3. .....

.....

Scanned with CamScanner

ஆற்றல்

அகரம் Aharam

மாதிரிப் பரீட்சை - 2021

தொடர் - 10

தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
சொற்களில்	

	பெயரும் ஒப்பமும்
